உ

கடவுள் துணை

# செந்தமிழ்

மதுரைத் தமிழ்ச்சங்கத் திங்கள் வெளியீடு

"எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்"—திருவள்ளுவர்.

தொகுதி—௫௧.] மன்மத ௵—ஆனி ௴ [பகுதி—அ.
Vol. 51. June-July—1955. No. 8.

உள்ளுறை

கோச்செங்கணான் காலம்: 225
டாக்டர். மா. இராசமாணிக்கனார்

சேரநாடு 233
ஔவை. சு. துரைசாமிப்பிள்ளை

மதிப்புரை: 250

மதுரைத்தமிழ்ச்சங்கத் தனித்தமிழ்ப் பரீக்ஷைத் தேர்ச்சிக் குறிப்பு:—

ஆங்கிலகலாசாலைத் தமிழ்ப்பரீக்ஷைத் தேர்ச்சிக்குறிப்பு:—

வருஷம் ஒன்றுக்கு ரூ. 4.] [தனிப்பிரதி அணா—8.

வெளிநாடுகளுக்கு ரூ. 4—8—0.

1955.

## "செந்தமிழ்" ஆசிரியர் குழு:


1. திரு. சித்தாந்த கலாநிதி, பேராசிரியர், ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை
   தியாகராசர் கல்லூரி, மதுரை. (தலைவர்)

2. திரு. பேராசிரியர், செந்நாவலர், ஆ. கார்மேகக்கோனர், மதுரை.

3. டாக்டர். மா. இராசமாணிக்கனர் M. A. M. O. L. L. T Ph. D.
   தமிழ்த்துறைத் தலைவர், தியாகராசர் கல்லூரி, மதுரை.

4. திரு. பேராசிரியர், பி. ஜோதிமுத்து M. A., B. D.
   தமிழ்த்துறைத் தலைவர், அமெரிக்கன் கல்லூரி, மதுரை.

5. திரு. நா. அப்பனையங்கார், ஆசிரியர், தமிழ்ச் சங்கம், மதுரை.

6. திரு. முகம்மது சுல்தான் அவர்கள், M. A. B. L.
   வழக்குரைஞர்-மதுரை.

7. திரு. வி சண்முகசுந்தரம் அவர்கள், M. A. B. L.
   செயலாளர், மதுரைத் தமிழ்ச் சங்கம்,
   அரசாங்க வழக்குரைஞர், மதுரை.

8. திரு. கி. பழநியப்பன் அவர்கள்.
   தலைவர், மதுரைத் திருவள்ளுவர் கழகம், மதுரை.

உ

கடவுள் துணை

# செந்தமிழ்

தொகுதி—௫௧.] மன்மத-ஷு—ஆனிமீ [பகுதி—௮.

Vol. 51. June-July—1955. No. 8.

## கோச்செங்கணான் காலம்

திரு. டாக்டர் மா. இராசமாணிக்கனார் அவர்கள், தமிழ்ப் பேராசிரியர்,
தியாகராசர் கல்லூரி, மதுரை.

63 நாயன்மாருள் ஒருவனும் அப்பர்க்கு முற்பட்டவனுமான கோச்செங்கணான் சங்க இறுதிக்காலத்தவன் என்று பலர் கூறியுள்ளனர். இதற்கு அவர் சான்றாகக் காட்டத்தக்கவை இரண்டு: (1) 74-ஆம் புறநானூற்றுப் பாட்டின் அடிக்குறிப்பில், "சேரமான் கணைக்கால் இரும்பொறை, சோழன் செங்கணானோடு போர்ப்புறத்துப் பொருது பற்றுக்கோட்பட்டுக் குடவாயிற் கோட்டத்துச் சிறையிற் கிடந்து 'தண்ணீர் தா' என்று, பெறாது, பெயர்த்துப் பெற்றுக் கைக்கொண்டிருந்து உண்ணான் சொல்லித் துஞ்சியபாட்டு" எனவரும் செய்தி. (2) "பொய்கையார் சோழன்மீது களவழிபாடிச் சிறைப்பட்ட அரசனை மீட்டார்" எனக் களவழி ஏடுகளின் ஈற்றில் எழுதப்பட்டுள்ள செய்தி. இவ்விரண்டு கூற்றுக்களையும் இங்கு ஆராய்வோம்:

1. மேற்சொன்ன 74-ஆம் செய்யுளில் கோச்செங்கணான் என்ற பெயர் இல்லை. அடிக்குறிப்பு, பாடிய புலவன் எழுதியதும் அன்று என்பது, 'உண்ணான் சொல்லித் துஞ்சிய பாட்டு' என்பதால் அறியப்

படும். புறநானூற்றுப் பாடல்களின் கீழ் உள்ள (பிற்காலத்தார் எழுதிய) அடிக்குறிப்புக்கள் பல இடங்களில் பொருத்தமற்றவை என்பது அறிஞர் நன்கறிந்ததே. சான்றாக ஓர் இடம் குறித்துக்காட்டுவம்: புறம் 389-ஆம் செய்யுளில் 'ஆதனுங்கனைப்போல நீ கொடுப்பாயாக' எனவரும் தொடரைக் கண்டதும், அஃது உவமையாகக் கூறப்பட்டதென்பதையும் கவனியாமல், இஃது 'ஆதனுங்கனைப் பாடிய பாட்டு' என்று அடிக்குறிப்பு வரையப்பட்டுள்ளது. இங்ஙனம் பிழைபட்ட இடங்கள் பல; பொருத்தமற்ற அடிக்குறிப்புக்கள் பல. இத்தகைய அடிக்குறிப்புக்களில் செங்கணானைக் குறிக்கும் அடிக்குறிப்பும் ஒன்றாகலாம். களவழிப் பாக்களைக் காணக் கோச்செங்கணான் பேரரசன் என்பதும் வீரம்வாய்ந்த பகைவரைக் கொன்றவன்[1] என்பதும், போரில் கொங்கரையும் வஞ்சிக் கோவையும் கொன்றவன்[2] என்பதும் தெரிகின்றன. இவற்றால் இச் சோழனை எதிர்த்த வஞ்சிக்கோ (சேர அரசன்) போரில் கொல்லப்பட்டான் என்பது விளக்கமாகிறது. கணைக்கால் இரும்பொறை பற்றிய பேச்சே களவழியிற் காணப்படவில்லை.

(2) முன் சொன்ன 74-ம் செய்யுள் தமிழ் நாவலர் சரிதையில் "சேரமான் கணைக்கால் இரும்பொறை செங்கணானாற் குடவாயிற் கோட்டத்துத் தளைப்பட்டபோது பொய்கையாருக்கு எழுதி விடுத்த பாட்டு" என்ற தலைப்பின்கீழ்க் காணப்படுகிறது. புறநானூற்று அடிக்குறிப்பும் இதுவும் வேறுபடக் காரணம் என்ன?

(3) புறநானூற்று 74-ஆம் செய்யுள் அடிக்குறிப்பு, கணைக்கால் இரும்பொறை சிறைக்கண்ணே இறந்தான் என்பதைக் குறிக்கிறது. ஆயின், தமிழ் நாவலர் சரிதையில் உள்ள செய்யுளின் அடியில் "இது கேட்டுப் பொய்கையார் களவழி நாற்பது பாடச் செங்கணான் சிறைவிட்டரசளித்தான்" என்று குறிக்கப்பெற்றுள்ளது. இவ்விரு கூற்றுக்களும் தம்முள் மாறுபடுதலைக் கண்ட பண்டித ந. மு. வேங்கட

[1] செ. 6, 16. [2] செ. 14, 19.

சாமி நாட்டார் அவர்கள், "தஞ்சினுன் கணைக்கால் இரும்பொறையாக, சிறைவீடு செய்து அரசளிக்கப்பட்டான் பிறனொரு சேரன் ஆவன் என்று கொள்ளவேண்டும்"[3] என்று கூறி அமைந்தனர். இன்னனம் பேரறிஞரையும் குழப்பத்திற்குட்படுத்தும் பொருத்தமற்ற அடிக்குறிப்புக்களைக்கொண்டு கோச்செங்கணன் போன்ற பேரரசர் காலத்தை வரையறுத்தல் வலியுடையதாகாது.

2. கோச்செங்கணன் 70 சிவன் கோவில்கள் கட்டினன் என்று திருமங்கையாழ்வார் குறித்துள்ளார்.[4] சங்க காலத்தில் எந்த அரசனும் சிவன் கோவிலோ திருமால் கோவிலோ கட்டியதற்குச் சான்றில்லை. சிவன் கோவில்கள் பலவாக ஒரே அரசனல் கட்டப்பெற்ற காலம் சைவ உணர்ச்சி வேகம் மிகுதிப்பட்ட காலமாதல் வேண்டும். சங்க காலத்தில் அத்தகைய உணர்ச்சி வேகம் மிகுந்திருந்ததாகச் சான்றில்லை. சங்ககாலத் தமிழ் உலகில் பல சமயங்களும் அமைதியாக இருந்தன என்பதே அறியக் கிடக்கிறது. அவ்வமைதியான நிலையில் ஓர் அரசன் 70 கோவில்கள் கட்டல் அசம்பாவிதம். ஆயின் சங்ககாலத்திற்குப் பின்னும் அப்பர்க்கு முன்னும் களப்பிரர், பல்லவர் போன்ற வேற்றரசர் இடையீட்டால் பௌத்தமும் சமணமும் தமிழகத்தில் மிகுதியாகப் பரவலாயின. சங்ககாலப் பாண்டியன் அளித்த பிரம்மதேய வுரிமையே அழிக்கக்கூடிய நிலையில் களப்பிரர் சமயக்கொடுமை இருந்தது என்பது வேள்விக்குடிப் பட்டயத்தால் தெரிகிறது. அக் களப்பிரர் காலத்திற்றான் மதுரையில் மூர்த்தி நாயனர் துன்பப்பட்டார். சோழநாட்டில் தண்டியடிகள், நமிநந்தி அடிகள் போன்ற சிவனடியார்க்கும் சமணர்க்கும் வாதங்களும் பூசல்களும் நடந்தன. இத்தகைய சமயக் கொடுமைகள் நடந்து, சைவ சமய வுணர்ச்சி மிக்குத் தோன்றிய பிற்காலத்தேதான், கோச்செங்கணன் போன்ற அரசர் பல கோவில்கள் கட்டிச் சைவத்தை வளர்க்க முற்பட்டிருத்தல் வேண்டும்

[3] களவழி முகவுரை, பக்.5 (கழகப் பதிப்பு) [4] திருநறையூர்ப் பதிகம் செ. 8.

3. கோச்செங்கணனைப் பற்றித் திருமங்கையாழ்வார் வெளி யிடும் கருத்துக்கள் இவையாகும்[5]:—

(1) உலகமாண்ட தென்னாடன்[6] குடகொங்கன், சோழன்.

(2) தென் தமிழன் வடபுலக்கோன்.

(3) கழல் மன்னர் மணிமுடிமேல் காகமேறத் தெய்வவாள் வலங்கொண்ட சோழன்.

(4) விறல் மன்னர் திறல் அழிய வெம்மாவுய்த்த செங்க ணான் கோச்சோழன்.

(5) படை மன்னர் உடல் துணியப் பரிமாவுய்த்த தேராளன் கோச்சோழன்.

இக்குறிப்புக்களால், (1) வலிபொருந்திய அரசர் பலரைப் போ ரில் கொன்றவன்-வென்றவன் என்பதும், (2) கொங்குநாடு வென்ற வன் என்பதும், (3) சோணாட்டுக்கு வடக்கிருந்த நிலப்பகுதியை (தொண்ட நாட்டை?) வென்றவன் என்பதும், (4) சிறந்த யானைப் படை, குதிரைப்படைகளை உடையவன் என்பதும் தெரிகின்றன.

'கழல் மன்னர், விறல் மன்னர், படை மன்னர்' என்றதால் சோழனை எதிர்த்தவர் மிக்கவலியுடைய பகையரசர் என்பது பெறப் படும். அரசர்களைச் செங்கணான் 'தெய்வ வாள்' கொண்டு வென் றான் என்பதாலும் பகையரசரது பெருவலிமை உய்த்துணரப்படும். சங்க காலத்தில் இத்தகைய மன்னர் பலருடன் செங்கணான் போரிட் டது உண்மையாயின், இப் போரைப் பற்றிச் சில செய்யுட்களேனும் அக்கால நூல்களில் இருந்திருக்கும் அல்லவா? சங்க காலத்தில் தொண்டை நாடும் சோழர் ஆட்சியில் இருந்தமை மணிமேகலையால் அறியலாம். அதற்கும் அப்பாற்பட்ட வடபுலத்தை இவன் வென் றான் எனக் கொள்ளின் அப்பகையரசன் யாவன் எனக் கூறுவது? சுருங்கக் கூறின், (1) இப்போர்களைப் பற்றிய பாக்கள் சங்க நூல்களில்

[5] திருநறையூர்ப்பதிகம், செ. 6, 5, 3, 4, 9.

[6] 'தென்னவனாய் உலகாண்ட செங்கணான்' என்ற சுந்தரர் தொடர் இத னுடன் ஒப்பு நோக்கத்தக்கது.

இல்லை; (2) இவன் அரசர் பலரை வென்றவனாகக் காண்கிறான்; (3) சங்க இறுதிக்காலத்தில் இங்ஙனம் ஒரு சோழன் பேரரசனாக இருந்தான் என்று கூறத்தக்க சான்றுகள் இல்லை; (4) இவன் சிவன் கோவில்கள் பல கட்டினவன். இந் நான்கு காரணங்களையும் நடுவு நிலையினின்று ஆராயின், கோச்செங்கணான் சங்க காலத்திற்குப் பிற்பட்டவனாக இருத்தல் கூடும் என்ற எண்ணமே பலப்படும்.

4. கோச்செங்கணான் தில்லையில் சமயத்தொண்டு செய்தவன் என்பது சேக்கிழார் கூற்று. 'தில்லை' ஒரு சிவத்தலமாகச் சங்கச் செய்யுட்களிற் கூறப்படாமை நோக்கத்தக்கது. அது செங்கணான் காலத்தில் சிறப்புப் பெற்றது. அவன் அங்கு மறையவரைக் குடியேற்றி மாளிகைகள் பல சமைத்தான்.[7] இங்ஙனம் தில்லை சிவத்தலமாகச் சிறப்புற்றமை சங்ககாலத்திற்குப்பிறகே என்பது தவறாகாது.

5. கோச்செங்கணானுடைய தந்தை பெயர் சுபதேவன், தாயின் பெயர் கமலவதி என்பன என்று சேக்கிழார் கூறியுள்ளார்.[8] இப் பெயர்களைச் சோழப் பேரரசின் முதல் அமைச்சரான சேக்கிழார் தக்க சான்று கொண்டே கூறினாராதல் வேண்டும். இப் பெயர்கள் தூய வடமொழிப் பெயர்கள். இங்ஙனம் சங்க காலத்து அரச குடும்பத்தினர் வடமொழிப் பெயர்களை வைத்துக்கொண்டனர் என்பதற்குப் போதிய சான்றில்லை. சம்பந்தர் காலத்திற்கு முற்பட்ட சுமார் 5 அல்லது 6-ஆம் நூற்றாண்டினர் என்று கருதத்தக்க காரைக்காலம்மையார்க்குப் புனிதவதி என்பது பெயர். அப் பெயருடன் மேற்சொன்ன 'கமலவதி' என்ற பெயர் ஒப்பு நோக்கத்தக்கது.

இத்தகைய பல காரணங்களால் கோச்செங்கணான் சங்ககாலத்தவன் ஆகான் எனக் கொள்ளலாம். ஆயின், அவன் அப்பர்-சம்பந்தரால் பாடப்பட்டவன். ஆதலின், அவன் காலம் மேற்சொன்ன சங்க காலத்திற்குப் பிறகும், அப்பர்-சம்பந்தர் காலத்திற்கு முன்னும்

---

[7] கோச்செங்கட்சோழர் புராணம், செ. 15, 16. [8] செ. 7.

ஆதல் வேண்டும். அஃதாவது, அவன் காலம் ஏறத்தாழக் கி. பி. 400—600-க்கு உட்பட்டது எனக் கூறலாம். இப்பரந்துபட்ட காலத்துள் அவன் வாழ்ந்திருக்கத்தக்க பொருத்தமான காலம் யாதெனக் காண்போம்.

## கோச்செங்கணான் காலம்

வேள்விக்குடிப் பட்டயப்படி, சங்ககாலத்திற்குப் பிறகு பாண்டிநாடு களப்பிரர் ஆட்சியில் இருந்தது; அக்களப்பிரர் கையிலிருந்தே கடுங்கோன் தன்னாட்டைக் கைப்பற்றினான் என்பது தெரிகிறது; ஆயின், சோழநாடு எவ்வளவு காலம் களப்பிரர் கையில் இருந்தது? கி. பி. 5-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் புத்ததத்தர் குறித்த அச்சுதனுக்குப் பிறகு சோழநாட்டை ஆண்ட களப்பிரர் யாவர் என்பன தெரியவில்லை. கி. பி. 5-ஆம் நூற்றாண்டின் இடையில் குமாரவிஷ்ணு என்ற பல்லவன் காஞ்சியை மீளவும் கைப்பற்றினான்...... அவன் மகனான புத்தவர்மன் கடல்போன்ற சோழர் சேனைக்கு வடவைத்தீப் போன்றவன் என்று வேலூர்ப்பாளையப்பட்டயம் பகர்கின்றது[9]. கி. பி. 6-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இருந்தவனாகக் கருதப்படும் முதலாம் நந்திவர்மன் விசய-காஞ்சிபுரத்திலிருந்து பட்டயம் விடுத்துள்ளான். ஏறத்தாழக் கி. பி. 575-இல் சிம்மவிஷ்ணு என்ற பல்லவன் மீட்டும் காஞ்சியைக் கைப்பற்றினான்; சோழர், மழவர், களப்பிரர் முதலியோரை வென்று காவிரிக்கரைவரை பல்லவநாட்டை விரிவாக்கினான் என்பது வேலூர்ப் பாளையப்பட்டயமும் கசாக்குடிப்பட்டயமும் குறிக்கும் செய்தியாகும்[10]. இக்குறிப்புக்களால் முன்சொன்ன குமாரவிஷ்ணுவுக்குப் பிறகும் சிம்மவிஷ்ணுவுக்கு முன்பும் காஞ்சி பல்லவர்வசம் இல்லாது அடிக்கடி கைமாறியதாக நினைக்க இடமுண்டு. அச்சுத விக்கந்தற்குப் பிறகு, சிம்மவிஷ்ணு சோணாட்டை வெல்லும்வரை களப்பிரரே சோணாட்டை ஆண்டனர்

[9] Ep Ind. III p. 142.

[10] I bid and Heras's 'Studies in Pallava Historys', p. 20.

என்பதற்குரிய சான்றும் இல்லை. மேற் குறித்த பல்லவர் செப்திகளைக்காண்கையில், சிம்மவிஷ்ணுவுக்கு முற்பட்ட பல்லவர் நிலையாகக் காஞ்சியில் தங்கித் தொண்டமண்டலத்தை ஆண்டதாகத் தெரியவில்லை. கி. பி. 5-ஆம் நூற்றாண்டின் இடையில் புத்தவர்மன் கடல் போன்ற சோழர் சேனையோடு போரிடவேண்டியவன் ஆனான்; 6-ஆம் நூற்றாண்டின் இறுதியில் சிம்மவிஷ்ணு சோழரை வென்றான். இவற்றால் புத்தவர்மன் செய்த போரைக்காணின், அச்சுதற்குப்பிறகு கி. பி. 5-ஆம் நூற்றாண்டில் சோழர் கடல்போன்ற சேனையை வைத்திருந்தனர்; அவர் பல்லவனுடன் போரிட்டனர் என்பன தெரிகின்றன. இங்ஙனம் கடல்போன்ற சேனையை வைத்துக்கொண்டிருந்த சோழன், சங்ககாலத்திற்குப் பிற்பட்டவனாகக் கருதத்தக்க கோச்சோழன் ஆகலாம். அவன் பல அரசர்களை முறியடித்தவன்-பெரிய யானைப்படை, குதிரைப்படைகளை உடையவன் என்பன களவழியாலும், திருமங்கையாழ்வார் பாசுரங்களாலும் தெரிகின்றன. இச்சோழன், தன் நாட்டைப்பற்றிக்கொண்ட களப்பிரரை அடக்கிப் பின் வடபுலத்திருந்த புத்தவர்மனுடன் போரிட்டு வெற்றி கண்டனன் போலும்! இவனை 'வடபுலக்கோன்' என்று திருமங்கையார் குறித்தமை இதுபற்றிப்போலும்! இங்ஙனமாகக் கொள்ளின், கோச்செங்கணான் காலம் புத்தவர்மன் காலமாகிய கி. பி. ஐந்தாம் நூற்றாண்டின் இடைப்பகுதி எனலாம். கோச்செங்கணான்மீது பாடப்பெற்ற களவழியின் காலம் ஏறத்தாழக் கி. பி. 450—500 என்ற இராவ்சாஹிப் திரு. S. வையாபுரிப்பிள்ளை அவர்கள் கருத்தும்[11] நமது முடிபிற்கு அரண்செய்தல் இங்கு அறியத்தகும்.

நடுவுநிலையினின்று மேற்சொன்ன காரணங்கள் பலவற்றையும் ஆய்ந்து இம்முடிபு கொள்ளப்படின், இக் கோச்சோழனை அடுத்து மேற்சொன்ன இடைக்காலத்தில் இருந்தவராகப் (பெரியபுராணம்

[11] Vide his Tirikadukam and Sirupanjamulam, University publication. p. p. 10—11 & 75.

கூறும்) புகழ்ச் சோழனை எடுத்துக்கொள்ளலாம். இவர் பெயர் சங்கநூல்களில் இல்லாததாலும் சிம்மவிஷ்ணுவுக்குப்பிறகு பல்லவர் காலத்தில் இத்தகைய சோழப்பேரரசர் இருக்க முடியாமையாலும் இந்த இடைக்காலமே இவர் வாழ்ந்த காலம் எனக் கோடல் பெரிதும் பொருத்தமே ஆகும்[12]. அச்சுதன்போன்ற களப்பிரப் பேரரசனும் கோச்செங்கணன் புகழ்ச்சோழர்போன்ற சோழப்பேரரசரும் கி. பி. 5, 6-ஆம் நூற்றாண்டுகளில் இருந்தமையாற்போலும் பல்லவர் சோழ நாட்டைக் கைப்பற்றக்கூடவில்லை!

கோச்செங்கணன், புகழ்ச்சோழர், களப்பிர அரசராகிய கூற்றுவ நாயனர்[13] இவர்களை இவ்விடைப்பட்ட காலத்தவராகக் (சுமார் கி. பி. 450-500) கொள்ளின், தென்னிந்திய வரலாற்றில் 'இருண்ட பாகம்' எனப்பட்ட காலத்தின் ஒரு பகுதி வெளிச்சமாயிற்றெனக் கொள்ள லாம். 'இவ்விருண்டகாலம் - பல்லவர் காஞ்சியைத் துறந்து தெலுங்கு நாட்டில் வாழ்ந்தகாலம்—சோழர் இடையீட்டுக்காலமாக இருத்தல்வேண்டும்' என்று வேங்கையா போன்ற கல்வெட்டறிஞர் கொண்ட கருத்தில்[14] ஓரளவு உண்மையுண்டு என்பதும் இதனல் உறுதிப்படும்.

இதுகாறும் செய்த ஆராய்ச்சியால், அப்பர்க்கு முற்பட்ட கோச் செங்கணன் காலம் கி. பி. 5-ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியாக லாம் என்பது பெறப்படும்.

---

[12] C. V. N. Iyer's Origin and Development of Saivism in S. India', p. 183.

[13] I bid. p p. 180—181

[14] I A 1908 p. 284

# சேர நாடு

சித்தாந்த கலாநிதி பேராசிரியர், ஔவை, சு. துரைசாமிப்பிள்ளை, மதுரை.

நீலத் திரைக்கட லோரத்திலே நின்று
நித்தம் தவஞ்செய் குமரியெல்லை—வட
மாலவன் குன்றம் இவற்றிடையே புகழ்
மண்டிக் கிடக்கும் தமிழ் நாடு.—பாரதியார்.

பண்டைநாளைத் தமிழகம் "வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ் கூறும் நல்லுலகம்" என்று தொல்காப்பியத்துக்குப் பாயிரம் தந்த பனம்பாரனூர் என்பவரால் சிறப்பித்துக் கூறப்படுவது. வட வேங்கட மலைத்தொடர் வடக்கே வடபெண்ணையாற்றங்கரை வரையில் தொடர்ந்து தமிழகத்துக்கு வடவெல்லையாகநிற்பது; தென்குமரியென்பது தென்கோடியிலுள்ள குமரிமலையாகிய தென்னெல்லை; கிழக்கிலும் மேற்கிலும் கடலாதலால் அவை குறிக்கப்படவில்லை.

பண்டைநாளில் இத் தமிழகம் சேர சோழ பாண்டியரென்ற மூவேந்தருக்கு உரியதாய் முறையே சேரநாடு சோழநாடு பாண்டிநாடு என மூன்று பெரும்பிரிவுற்று விளங்கிற்று. பண்டைத் தமிழாசிரியன்மாரும் "பொது மை சுட்டிய மூவருலகம்" (புறம் 357) "வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பு. (தொல். செய்; 78) என்று கூறியுள்ளனர். வடக்கே வேங்கடம் முதல் தெற்கே புதுக்கோட்டைக்கு அண்மையிலோடும் வெள்ளாறு வரையில் சோழநாடும், வெள்ளாற்றுக்கும் தென்குமரிக்கும் இடைப்பகுதி பாண்டிநாடும், மேலைக்கடலுக்கும் மேலைமலைத்தொடருக்கும் இடையிலுள்ள நிலப்பகுதி சேரநாடுமாகும். ஆயினும், ஏனைச் சோழ பாண்டிய நாடுகளைப் போலாது தனது மொழியும் பண்பாடும் தொன்மை வரலாறும் இழந்து முற்றிலும் வேறுநாடாகக் காட்சியளிக்கும் வகையில் சேரநாடு தமிழ் நலம் குன்றிவிட்டமையின், அதன் பண்டைய எல்லை நன்கு ஆராய்ந்தல்லது வரையறுத்துக் கூறமுடியாத நிலையில் உளது.

இங்கே பண்டைநாள் என வழங்குவது கடைச்சங்க காலமாகும். அக் காலத்தே சேரநாடு செந்தமிழ் நலம் சிறந்து தமிழ் கூறும் நல்லுலகமாக விளங்கிற்று. சங்ககால நூல்களை நன்கு பயின்றாலன்றிச் சேரநாட்டின் பண்டைநாளை நிலையினை அறிவது அரிது. அதுபற்றியே சோழர்களைப் பற்றியும் பாண்டியர்களைப் பற்றியும் வரலாற்று நூல்கள் (History) உண்டானது போலச் சேரநாட்டுக்கு வரலாறொன்றும் தோன்றவில்லை. சேரநாடு பிற்காலத்தே கேரளநாடென வழங்கத் தலைப்பட்டது. அதன்பின் கேரளோற்பத்தி, கேரளமகாத்மியம் என்ற வரலாற்றுப் போலிகள் உண்டாயின. சேரநாடென்பது கேரளநாடாதற்கு முந்திய நிலையாதலால், அதன் தொன்மை நிலை அறிதற்குச் சேரமன்னர்களையும் சேரநாட்டு மக்களையும் பற்றிக் கூறும் சங்க இலக்கியங்கள் சான்றாகின்றன.

இச் சங்க இலக்கியங்கள் பலவும் தொகைநூல்களாதலால் (Anthologies) அவற்றில் சேரநாட்டின் வடக்கும் தெற்குமாகிய எல்லைகள் இவையென வரையறுத்தறிதற்குரிய குறிப்புகள் விளக்கமாக இல்லை. ஆயினும், தென்கன்னடம் ஜில்லாவிலுள்ள குதிரைமலையும், ஏழில் மலையும், குடகு நாட்டிலுள்ள நறவுக்கல்பெட்டா மலையும், நீலகிரிப் பகுதியிலுள்ள உம்பற்காடும், மலையாளம் ஜில்லாவிலுள்ள வயநாட்டுப் பாயல்மலையும், கோட்டயம் தாலூகாவிலுள்ள தொண்டியும், கொச்சி நாட்டிலுள்ள கருவூர்ப்பட்டினமும், திருவஞ்சைக் களமும், கொடுங்கோளூரும், திருவாங்கூர் அரசிலுள்ள நேரிமலை அயிரை மலைகளும் பேரியாறும் பிறவும் சேரர்க்குரியவாகக்கூறப்படுகின்றன. மேலை மலைத்தொடரின் தென்பகுதியில் உள்ள அதககோடும் பொதியிலும், தென்குமரிபாண்டியர்க் குரியவாகக் குறிக்கப்படுகின்றன.

கி. பி. 2-ம் நூற்றாண்டில் மேலைக்கடற்கரைப் பகுதிக்கு வந்துசென்ற யவன் அறிஞரான தாலமி யென்பவாது குறிப்பால் அப்போது சேரநாட்டுக்கு வடக்கில் வானவாறும் (Honawar), கிழக்கில் கருவூரும், தெற்கில் கொல்லத்து ஆறும் மேற்கில் கடலும் எல்லைகளாக இருந்தன என ஆராய்ச்சியாளர்[1]

[1] William Logan's Malabar P. 254.

உரைக்கின்றனர். வானவாறென்பது வட கன்னட நாட்டின்தென் கோடியில் இருக்கும் கடற்கரையூர்; வட கன்னடத்தையும் தென் கன்னடத்தையும் எல்லையாய் நின்று பிரிக்கும் ஆறு கடலொடு கலக்கு மிடத்தில் வடகரையிலேயே இருக்கிறது. அந்த ஆற்றுக்கும் வானவா றென்பது பெயராம். வானவாறு தோன்றும் இடம் வானவாசி நாட்டைச் சேர்ந்தது. அதனால் சேரநாட்டின் வடக்கில் வானவாசி நாடு உளது என்றற்குப் போதிய இடமுண்டாகிறது.

இனி, எழு கொங்கணத்துக்கும் கோளநாட்டுக்கும் கோகரணம்[1] எல்லை என்று கூறுவோரும் உண்டு. வேறுசிலர் கொங்கணம் ஏழனை யும் தன்னகப்படுத்தி வடக்கிற் சூரத்து வரையில் சேரநாடு பரவி யிருந்தது என்பர்[2]. கொங்கணம் ஏழாவன கிராத நாடு, விராத நாடு, மராட்டநாடு, கொங்கணநாடு, கூபகநாடு, ஹைவநாடு, துளுவ நாடு என்பன. அவற்றுள் கொங்கணம் சங்க இலக்கியங்களில் கொண் கானம் என வழங்கும்; அஃதாவது, தென்கன்னடம் ஜில்லாவின் பெரும்பகுதி யெனக் கொள்க. கொண்கானம் வேறு கொங்குநாடு வேறு. கொண்கான மென்பது மேலைமலைத்தொடருக்கு மேற்கில் கடல் சார்ந்து மலைக்கும் கடலுக்கும் இடையிற்கிடப்பது. கொங்குநாடு மேலை மலைத் தொடருக்குக்கிழக்கில் உள்ள உண்ணாட்டுப் பகுதி. ஹைவநா டென்பது நாகநாடெனவும் வழங்கும். இப்போதுள்ள குடகு நாட்டின் ஒரு பகுதி; அந் நாட்டிலுள்ள சோமவாரப்பேட்டை யென்னும் ஊர்க் குப் பழம்பெயர் நாகரூரென்பது.[3] வடகன்னடம்ஜில்லாவையும் ஹைவ நாடென்பர். அப்பகுதியில்தோன்றி மைசூர்நாட்டிலோடும் நாகநதியின் பெயர் இதனைவற்புறுத்துகிறது. மணிமேகலையாசிரியர் காலத்தில் இப் பகுதி நாகநாடென வழங்கிற்றென்பதற்கு "நக்க சாரணர் நாகர் வாழ் மலைப்பக்கம்" என[4] அவர் கூறுவது நினைவுகூரத்தக்கது. இவ்வாற் றால் சேரநாட்டின் வடவெல்லை இன்றைய வடகன்னட நாட்டகத்தும் பரவியிருந்ததென்பது தெரிகிறது.

---

[1] Wilke's South of India. P. 1-15.

[2] Buchanan's Mysore and Canara Vol III. P. 348. Bombay Gazetteer Vol. XV Part II P. 75.

[3] Imperial Gezetteer Mysore and Coorg. P. 331.

[4] மணி. XVI-15-6.

மேனாட்டறிஞரான பிளினி (Pliny) என்பாரது குறிப்பை ஆராயுங்கால் சேரநாட்டின் தென்னெல்லை இப்போதுள்ள கொல்லமும் கோட்டாற்றுக் கரையும் (Kottarakkara) எனத்தெரிகிறது. மேலும் திருவிதாங்கூரின் தென்பகுதி முற்றும் பாண்டிநாடாகவே இருந்ததென்றும் விளங்குகின்றது. பெரிப்புளூஸ் நூலாசிரியர் குறிப்பும் இம் முடிபையே வற்புறுத்துகிறது.

இங்கே காட்டிய மேனாட்டறிஞர்களின் குறிப்புக்கள் 1800 ஆண்டுகட்கு முற்பட்டன. அந் நாளில் விளங்கிய தமிழ்ச் சேரநாட்டின் தென்னெல்லை கொல்லத்தோடு நின்றதென்பது தெளிவாம். அந்த அறிஞர்கள் குறிக்கும் தொண்டி முசிறி முதலியன சேரர்களைப் பாடிய சங்க இலக்கியங்களிலும் காணப்படுவன. இவ்வாறே வடகன்னட நாட்டில் வழங்கும் செய்திகளால் பண்டைநாளைச் சேரநாடு கோகரணத்துக்கு வடக்கேயும் பரந்திருந்தமை தெளிவாய்த் தெரிகின்றது: கி. பி. 7. ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த திருஞானசம்பந்தர் திருக்கோகரணத்தைப் பாடிய திருப்பதிகத்தால் (337:2) அஃது அவர் காலத்தே தமிழ் நலம் பெற்று விளங்கிய குறிப்பு விளங்குகிறது. வடகன்னட நாட்டு ஹோனவாருக்குத் தெற்கே 25கல் தொலைவில் இருக்கும் (Bhatkal) பாட்கல் என்னும் ஊரில் இருக்கும் கோயில்களில் இரண்டு தமிழ்க்கல்வெட்டுக்கள் உள்ளன.[1] இக் குறிப்புக்களால் சேரநாட்டின் வடவெல்லை வடகன்னடத்துக் கோகரணம் வரையில் பரவியிருந்ததென்ற கொள்கை மேற்கொள்ளத் தக்கதாகின்றது.

பிற்காலத்தே சேரநாட்டுக்கு எல்லை பலவகையாகக் கூறப்படுவதாயிற்று. வடக்கிற் பழநாட்டுக்கும் கிழக்கிற் செங்கோட்டுக்கும் மேற்கில் கோழிக்கோட்டிற்கும் தெற்கிற் கடற்கோடிக்கும் இடையிற் கிடந்த சோநாடு எண்பது காவதம் பரப்புடையதென்பது ஒருவகை; எண்பது காவதப் பரப்புடைய சேரநாட்டுக்கு வடக்கில் பழனியும் கிழக்கில் தென்காசியும் மேற்கில் கோழிக்கோடும் தெற்கிற் கடற்கோடியும் எல்லை யென்பது மற்றொருவகை (பெருந்தொகை 2091). வடக்

[1] Bombay Gazetteer Kanara Part II P. 266-271.

கிற் பழனியும், கிழக்கில் பேரூரும், தெற்கிலும் மேற்கிலும் கடலும் எல்லையாகக் கொண்டு குறுக்கும் நெடுக்கும் எண்பது காவதப் பரப்புடையது சேரநாடு எனக்கூறுவது வேறொருவகை[1] பழனிக்குப் பண்டைநாளைப் பெயர் பொதினி என்பது (அகம் 61). ஆவினன் குடி யென்பது மொன்று (முருகு 176). எனவே, பழனியை எல்லையாகக் கூறும் கூற்றிரண்டும் பிற்காலத்தன என்பது தானே விளங்கும். மலையாள சில்லாவில் குறும்பர்நாடு தாலூக்காவைச் சேர்ந்த ஒரு பகுதிக்குப் பழநாடு என்றொரு பெயர் உண்டு; அதன் வடவெல்லை வடகரை யென்றும் அதனருகேவந்து கடலில் கலக்கும் ஆற்றுக்குச் சேரவாறு என்றும் பெயர். வடகரை யென்னும் ஊர் படகார (Badakara) என்றும் அந்த ஆறு தோன்றும் இடத்தருகேயுள்ள ஊர் சேரபுரம் என்றும் இப்போது வழங்குகின்றன. இதனால் ஒருகாலத்தில் சேரநாடு வடக்கிற் பழநாட்டோடு நின்றமை தெரிகிறது. இதற்கு வடக்கில் கோகரணத்தையும் பின்பு ஹோனவாற்றையும் எல்லையாகக் கொண்டு கொண்கான நாடு விளங்கிற்று.

இங்கே கண்ட பழநாடு பிற்காலத்தே அரச குடும்பத்தினர் ஒருவரது ஆட்சியிலிருந்தது. அவர்கள்பின்னர் கிழக்கில் மைசூர் நாட்டையடைந்து அங்கே அஸ்ஸன் சில்லாவில் மஞ்சராபாத் தாலூகாவைச் சேர்ந்த அயிலூர் என்னுமிடத்தே யிருந்து இறுதியில் மைசூர் வேந்தர்க்கு அடங்கியொடுங்கினர்.[2] இந்தப் பழநாட்டு வேந்தர் தம்மை நாயக்கமன்னர் என்பதனால் அவரது தோற்றவொடுக்கங்கள் பண்டைநாளைச் சேரநாட்டைக் காண்டற்குத் துணையாகாமையால் அதனை இம் மட்டில் நிறுத்தி மேலே செல்வாம்.

இனி "செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலம்" (தொல் சொல் தெய்வ 395) எனவரும் தொல்காப்பிய நூற்பா வொன்றுக்கு உரைகண்ட தொல்லாசிரியர்கள், அப் பன்னிரண்டையும், பொங்கர்நாடு, ஒளிநாடு, தென்பாண்டி நாடு, குட்ட நாடு, குட நாடு, கற்கா நாடு, பன்றி நாடு, அருவா நாடு, அருவா வடதலை, சீத நாடு, பூழி நாடு, மலாடு என்று குறிக்கின்றனர். பிற்காலத்தறிஞர் பொங்கர்நாடு, ஒளிநாடு என்ற

[1] W. L. Mala. P. 255.
[2] L. Rice: Mysore Vol. ii. p. 361 and Vol. i. p. 419.

இரண்டையும் விலக்கி வேணாடு புனனாடு என்ற இரண்டையும் பெய்து கூறுவர். இவற்றுள் தென்பாண்டி, குட்டம், குடகு என்பன நன்கு தெரிகின்றன. தொண்டை நாட்டின் தென்பகுதியின் கடல் சார்ந்த நிலம் அருவாநாடெனக் கல்வெட்டுக்களால் குறிக்கப்படுவதால் அருவாநாடும் அருவா வடதலையும் தொண்டைநாட்டைக் குறிக்கின்றமை பெறப்படும். கற்கா நாடென்பது இந் நாளைக் கன்னடநாட்டைக் குறிக்கிறதென்பது பழங்கன்னட நூல்வழக்கால் இனிது தெரிகிறது. திண்டுக்கல்லுக்கு மேற்கிலுள்ள குன்றுகட்குப் பன்றி மலையென்று பெயர் வழங்குவதால் அப்பகுதியைப் பன்றிநாடெனக் கொள்ளலாம். இப்பொழுது தேனி, சின்னமனூர், கம்பம், கூடலூர் என்ற ஊர்களிருக்கும் நாட்டைச் சில ஆராய்ச்சியாளர்கள் பூழிநாடெனப் பெயர் கூறுவாராயினும் அங்குள்ள கல்வெட்டுகள் அப்பகுதியை அளநாடு எனக் குறிக்கின்றன.[1] இனி மலபார் சில்லாவில் பொன்னானி தாலூகாவின் தென்பகுதி இன்றும் பூழிநாடெனப் படுகிறது.[2] மலாடென்பது திருக்கோயிலூர் தாலூகாவின் மேலைப் பகுதியெனக் கல்வெட்டுக்களால் தெரிகிறது. காவிரிபாயும் நீர்நாடு, சீதநாடு, எனப்பட்டதெனக் கொள்ளினும் பொங்கர்நாடு, ஒளிநாடு, என்பன இவையெனத் தெரியவில்லை. பொங்கர் நாட்டைத் தெய்வச்சிலையார் வையையாற்றின் தென்கிழக்கிலுள்ள பகுதியென்பர். வேணாடு என்பது மேனாட்டுயவனர் குறிப்புக்களால் கொல்லத்துக்கும் பொதியின் மலைக்கும் இடையிலுள்ள பகுதியென்று அறிகின்றோம். புனனாடென்பதைப் புன்னாடெனக் கொள்ளின் அது கொங்குநாட்டின் வடபகுதியிலுள்ள நாட்டைக் குறிப்பதாம்; அபகுதி புன்னாடென்றே அங்குள்ள கன்னடமொழி நூல்களில் குறிக்கப்படுகிறது.[3]

இவ்வகையில் தமிழ்மக்களும் தமிழ்நூல்களும் மேனாட்டறிஞர்களும் கூறுவனவற்றைக்கொண்டு நோக்கின் மேலைக்கடற்கரைப் பகுதி, தென்பாண்டி நாடு, வேணாடு, குட்டநாடு, குடநாடு, பூழிநாடு

---

[1] Madras Epigraphy Annual Report No. 423 of 1907.
[2] Malabar Manual Vol. i. p. 647, 666.
[3] Heritage of Karnataga p. 10.

கற்கா நாடு என ஆறு நாடுகளாக விளங்கியிருந்தமை பெறப்படும்; கற்கா நாடு கொண்கான நாடெனவும் வழங்குதலால் இவற்றை வடக்கிலிருந்து முறையே கொண்கானநாடு, குடநாடு, குட்டநாடு, வேணாடு, தென்பாண்டி நாடு குட்டநாட்டைச் சேர்ந்திருப்பதாகக் கூறப்படும் பூழிநாடு என்று ஆறுமாகக் கோடல் வேண்டும்.

இனி இப்பகுதிகளைத் தனித்தனியே எல்லைகண்டு தெளியுமுன் இந்நாட்டில் வழங்கும் நூல்களைக்காண்பது முறை. கொங்கணநாடு கன்னடமொழி வழங்கும் நிலமாகவும், வேணாடும் குட்டநாடும் குடநாடும் மலையாள மொழி வழங்கும் நிலமாகவும் மாறிவிட்டன. தென்பாண்டி நாட்டுப்பகுதி மலையாளவேந்தர் அரசியற்கீழ் அகப்பட்டுள்ளது. கன்னடமொழிந்த ஏனைப்பகுதி முற்றும் இப்போது கேரளநாடு என்ற ஒரு பெயர் தாங்கி நிலவுகிறது. இப்பகுதியின் தொன்மை கூறுவனவாகக் கேரளோற்பத்தி கேரள மான்மியம் என்ற இரு நூல்கள் உள்ளன. இவற்றின் அடிப்படையே, இக்கேரளப் பகுதி தமிழ்கூறும் நல்லுலகத்தின் கூறு என்பதை மறந்து நிற்கிறது. கேரளமென்பது சேரலர் என்ற தமிழ் மொழியின் சிதைவென்பதை யறியாது தனித்தோற்றமென்னும் மயக்கத்தில் இவை முளைத்து உருவாகி இருக்கின்றன.

கேரளோற்பத்தி கேரளமான்மியம் என்ற இவ்விரு நூல்களும் கேரளநாட்டை நான்காக வகுத்துத் துளுநாடு, கூபகநாடு, கேரளநாடு, மூஷிக நாடு என்று கூறுகின்றன. கோகரணம் முதல் பெரும்புழையாறு வரையில் உள்ளது துளுநாடு; பெரும்புழையாறு என்பது ஏழில்மலைப் பகுதியில் ஓடும் பழையனூராறாக இருக்கலாம் என்பர். பெரும்புழையாறு முதல் புதுப்பட்டினம் வரையில் உள்ளது கூபகநாடு என்றும், புதுப்பட்டினத்திலிருந்து கன்னெற்றி வரையிலுள்ளது கேரளநாடென்றும், கன்னெற்றிக்கும் தென்குமரிக்கும் இடையில் கிடப்பது மூஷிகநாடென்றும் கூறப்படுகின்றன. மூஷிகநாடு கூசலநாடெனவும் பெயர் கூறப்படும். கூபகநாடு இப்போது கோவா நாடு என வழங்குகிறது: கன்னெற்றி என்பது தென் கொல்லமாமென [1]ராபர்ட் சூவெல் கூறுகின்றார். இவைகள்

[1] Archeological survey of South India Vol. ii. p. 196.

பெரும்பாலும் நூல்வழக்காய் நின்றொழிந்தனவேயன்றி இடைக்காலச் சோழ பாண்டிய கொங்கு கன்னட வேந்தர் காலத்தும் நடைமுறையில் இருந்ததே யில்லை. இச்செய்தி இந்நாட்டுக்கல்வெட்டுக்களால் விளங்குகிறது.[1] இவற்றில் துளுநாடென்பது கோசர்கள் வாழும்நாடு என்று மாமூலனாரால்[2] அகநானூற்றிற் குறிக்கப்பெறுகிறது. வானவாற்றுக்கு அண்மையில் இருக்கும் பாழிநகரம் வேளிர்க்குரியதெனப் பரணர் கூறுகின்றார்[3]. இப் பாழிநகர் இப்போது பாட்கல் என வழங்குவதால் கொண்கானத்தின் வடக்கில்இருந்த நாடு வேளிரது வேளகம் என்னும் வேணாடென்பது இனிது காணப்படும். பிற்காலத்தே வேணாட்டின் வட பகுதி வேளகமென்றும் தென்பகுதி வானவாசியென்றும் வழங்கலாயின. கொண்கான நாட்டிலிலுள்ள ஏழில்மலை பிற்காலத்தே எலிமலையெனக் குழறிக் கூறப்படுகிறது. இக்குழறுபடையையே அடிப்படையாகக் கொண்டு கேரளநாட்டு வடமொழியாளர் மூஷிகநாடு என்று ஏழில்மலைப் பகுதிக்குப் பெயர் வழங்கியிருக்கின்றனர்[4]. இனி இடைக்காலத்தும் பிற்காலத்தும் வாழ்ந்த திருவிதாங்கூர் வேந்தர்கள் தம்மை வேணாட்டடிகள் என்று கூறிக்கொள்வதை அவர் தம் கல்வெட்டுக்கள்[5] தெரிவிக்கின்றன. கேரளவரலாறு கூறுவோருட்சிலர் வேணாடென்பது வானவநாடு என்பதன் திரிபு எனக் கூறுகின்றனர். திருவிதாங்கூர் உள்ள பகுதியை மேனாட்டு யவனர் ஆய் நாடென்பதும், ஆய்என்பான் தமிழ் வேளிரு ளொருவன் என்பதும், எனவே, அப் பகுதி வேணாடாமென்பதும் அறியாமையால் கேரள வரலாறுடையார்[6] இவ்வாறு கூறலாயினர் எனக் கொள்ளல் வேண்டும்.

மேலைக் கடற்கரைப் பகுதியான சேரநாட்டின் வடக்கிற் பகுதி கொண்கானநாடு. அதன் தெற்கில் உள்ளது குடநாடு. அதனையடுத்து நிற்கும் தென்பகுதி குட்டநாடு. அதன் தெற்கு வேணாடு என்பது

---

[1] Travancore Archeological Series Vol. ii. p. 106.
[2] அகம் 15. [3] Ibid. 258. [4] T. A. S. Vol. ii. p. 87-113. மூஷிக வம்சம்
[5] A. R. No. 39-41 of 1936-37.
[6] K. P. P. Menon's History of Kerala Vol. ii- p. 5

முன்னர்க் காணப்பட்டது. சேரநாட்டு வடகரைக்கும் கோகரணத்துக்கும் இடைநின்ற நாடு கொண்கானநாடு. இது துளுநாடென்றும் வழங்கியதுண்டு. பொன்வானி யாற்றுக்கும் வடகரைச் சோவாற்றுக்கும் இடையிலுள்ளது குடநாடு. பொன்வானி இந்நாளில் பொன்னானியென வழங்குகிறது. கொல்லத்துக்கும் பொன்வானிக்கும் இடையில் உளதாகிய நாடு குட்டநாடாகும். இதனையே சுருங்க நோக்குங்கால் திருவாங்கூர் நாட்டுக் கோட்டயம் பகுதிக்கும் வடக்கில் மலையாளம் சில்லாவைச் சேர்ந்த கோட்டயம் பகுதிக்கும் இடையே இரண்டையும் தன்னுள் அகப்படுத்தி நிற்கும் நிலப்பகுதி சேரநாடென்பது இனிது விளங்கும். திருவிதாங்கூர் நாட்டுக் கோட்டயம் பகுதியிலுள்ள அம்பலப்புழை, கருநாகப்பள்ளி, செங்கணூன்சேரி, மூவாத்துப்புழை என்ற தாலூக்காக்கள் அடங்கிய பகுதி அந்நாட்டவரால் குட்டநாடென்று வழங்குகிறது. மலையாள சில்லாவிலுள்ள பொன்னானி தாலூக்காவின் தென்பகுதி குட்டநாடென அப் பகுதியில் வாழும் மக்களால் பெயர் கூறப்படுகிறது. இதனால் குட்டநாட்டின் பரப்புத் தெளிவாகத் தோன்றுகிறது. பொன்னானி தாலூக்காவுக்கு வடக்கிலுள்ள ஏர்நாடு தாலூகா அந்நாட்டவரால் இராமநாடென்று குறிக்கப்படுகிறது. இடைக்காலச் சோழவேந்தர்களின் கல்வெட்டுக்கள் அதனை இராமகுடநாடு என்று குறிக்கின்றன[1]. இந் நாட்டுக்கும் இதற்கு வடக்கிலுள்ள குறும்பர் நாடு தாலூக்காவுக்கும் கிழக்கிலுள்ள குடகு நாட்டவர் தம்மைக் குடவர் என்றும் தம்முடைய நாட்டைக் குடநாடென்றும்[2] கூறுகின்றனர். இவ்வாற்றால் குடநாட்டின் பரப்பும் முன்னேகண்ட அளவில் நிற்பது பெறப்படும். இப்போது கண்ட குடநாட்டின் வடக்கில் நிற்கும் ஏழிற்குன்றம் கொண்கான நாட்டது என்றும், அது நன்னன் என்ற வேந்தர்க்குரியதென்றும்[3] அந்நன்னனை நன்னன் உதியன்[4] என்றும் சங்கச் சான்றோர் கூறுதலால், கொண்கானநாடு சேரர்க்குரிய குடநாட்டதென்பது தெளியப்படும்.

---

1. A. R. No. 523 of 1930. 2. Imp. Gazet of India: Mysore and Coorg. P. 273. 3. நற். 391. 4. அகம் 258.

இவ்வாறே தெற்கில் கொல்லத்துக்கும், வடக்கில் கோகரணத்துக்கும் இடையில் குட்டம் குடம் என இரு பெரும் பகுதியாகத் தோன்றும் சேரநாட்டுக்குத் தெற்கில் வேணாடும் வடக்கில் கொண்கான நாடும் எல்லைகளாய் விளங்கின. இந்தச் சேரநாட்டை ஏனைத் தமிழ் நாட்டினின்றும் பிரித்து வைப்பது மேற்குமலைத் தொடர்.[5] தெற்கிற் பொதியின் மலையிலிருந்து வடக்கு நோக்கிச் செல்லும் இம் மலைத்தொடர், பம்பாய் மாகாணத்துத் தபதி நதிக்கரை வரையில் தொடர்ந்து நிற்கிறது. இதன் நீளம் 1000 கல். வடகன்னடம் சில்லாவில் இரு சிறு பிளவுகளும் இடையில் மலையாளம் சில்லாவில் ஒரு பெரும் பிளவும் திருவிதாங்கூர்ப்பகுதியில் ஒரு சிறு பிளவும் இம் மலைத்தொடரில் உள்ளன. இவற்றுள் மலையாளம் சில்லாவிலுள்ள பிளவு போல ஏனைய பிளவுகள் இடைக்காலத்தில் மக்கட் போக்கு வரவுக்குப் பெருந்துணை செய்யவில்லை. இப்பெரும் பிளவைப் பாலைக்காட்டுக் கணவாய் என்பது வழக்கம். இப் பிளவின் வடமலைத் தொடர் வானமலை யெனவும், தென்மலைத்தொடர் பொருப்பு, தென்னம்பொருப்பு எனவும் வழங்கும். இப் பிளவின் இடையகலம் 20 கல். சென்னையிலிருந்து கோயம்புத்தூர் வழியாக மேலைக்கடற்கரைக்குச் செல்லும் இருப்புப் பாதையும் பெருவழியும் (High Road) இப் பிளவினூடே செல்கின்றன. இப் பிளவில் பொன்வானியாறு, மாலம்புழா, பாரதப்புழா பென்ற பெயர் தாங்கிச் சென்று மேலைக்கடலைச் சேர்கிறது. இப் பிளவின் கீழைவாயிலாகப் பாலைக்காடு நிற்கிறது. தமிழகத்தின் வடகிழக்கில் திருப்பாலைவனம் என இப்போது வழங்கும் பாலைக்காடு இருப்பதுபோலத் தென்மேற்கில் இப்பாலைக்காடு பண்டையோரால் வகுக்கப் பெற்றிருப்பது கண்டு நினைவுகூரத்தக்கது.

இப் பிரிவின் வடமலைத் தொடர்களிற் காணப்படும் ஏழில்மலையும் குதிரைமலையும் தென்மலைப் பகுதியில் பொதியமும் நாஞ்சில் மலையும்

---

5. மேற்கு மலைத்தொடர் என்பது மேனாட்டவர் குறித்த வெஸ்டர்ன் காட்ஸ் (Western Ghats) என்ற பெயரின் மொழி பெயர்ப்பு. வடவர் இதனை சஹ்யாத்திரி என மொழிபெயர்த்து வழங்குவர். இதன் பழமையான தமிழ்ப் பெயர் வானமலை யென்பது. இதன் ஒரு பகுதி ஆனைமலைத்தொடர் என மருவி வழங்குகிறது; வஞ்சிக்களம் அஞ்சிக்கள மெனவும், வஞ்சனாடு அஞ்சனாடு எனவும் மருவுவது மலைநாட்டிற் பெரு வழக்கு.

அயிரைமலையும் நேரிமலையும் பிறவும் புலவர்பாடும் புகழ்பெற்றன. சேர நாட்டின் வடபகுதியான குடநாட்டு மலைகளுள் ஏழில்மலை 855 அடி உயரமுள்ளது. இது நிற்கும் பகுதி கோண்கானம் என்பது முன்பே கூறப்பட்டது. இதுவே கொங்கணமென்றும் இங்கே வாழும் கொண்கானிகள் கொங்கணி யென்றும் வழங்கப்படுவது காலவளவில் உண்டான சிதைவு. பண்டைநாளைத் தமிழ்மக்கள் மேற்கொண்டிருந்த இசைக்கருவிகளுள் ஏழில் என்பது ஒன்று; அதுபோலும் தோற்றத்தை இம் மலையும் கொண்டிருந்தமையின் பண்டையோர் இதனை ஏழில் மலை யென்றனர். இவ்வாறே குதிரைமுகம் போலக் காட்சியளிக்கும் மலைமுடியைக் குதிரைமலை யென்று வழங்கினர்.[1] இவ்வேழில் மலைக்குக் கிழக்கில் தோன்றும் குன்றுகளில் ஒன்று நீலகிரி யெனப்படுகிறது. சேரன் செங்குட்டுவன் வடநாடு சென்றபோது தங்கினதும் இவ்விடத்தேயாம். இதற்கு இங்குள்ள செங்கோட்டூர் இனிய சான்று பகருகின்றது. இச் செங்கோட்டூர் செங்குட்டூர் என்பதன் திரிபு. அக்காலை அவன்பால் கொங்கணக் கூத்தரும் கொடுங்கருநாடரும்[2] வந்து தமது கூத்தால் அவனை மகிழ்வித்துப் பரிசில் பெற்று இன்புற்றனரென்று இளங்கோவடிகள் இயம்புகின்றார். மேலை நாட்டினின்றும் வாஸ்கோடகாமா வந்தபோது அவன் துணைவர் மேனாட்டுக் கடல்வணிகர்க்கு முதற்கண் இப் பகுதியிற் காட்சி தருவது இவ் வேழில் நெடுவரையே என்று கூறினர்.[3]

மேனாட்டவர் முதற்கண் அப் பகுதிக்கு வந்தபோது அங்கே துளுவும் கன்னடமும் கலந்து தமிழ் தனது செந்நிலை வழுவி வந்த காலமாகும். அதனால் அவர்கள் ஏழில்மலை யென்னாது எலிமலையென்றும் அங்கே எலிகள் மிகநிறைந்திருந்தன என்றும் தவறு கூறியிருக்கின்றனர். அதுகேட்ட அம் மேனாட்டவர் தம் குறிப்பில் ஏழில் மலையை எலிமலை யென்றே குறித்துள்ளனர். பின்வந்த கொரீஇயா Correa) என்பார் அங்கு வாழ்ந்தவருள் கற்றோர் சிலரை உசாவினராக அவர்க்கு அவர்கள் ஏழில்மலையை சப்த சயிலம் என்று வடமொழிப்படுத்துக் கூறினர். ஆயினும் அது பெருவழக்கில் இல்லை. அவர்க்குப் பின்னே வந்த மார்க்கோ போலோ ஏழில்மலைநாட்டை

[1] Imp. Gazetteer of Madras Vol. II P. 395—6.
[2] சிலப். 26, 106. [3] W. Logan's Malabar, P. 7.

எலிமலை நாடென்றும், இபன் பாதுதா, ஹிலி யென்றும் குறித்துள்ள னர். கோளாத்திரி வேந்தர்களின் அரண்மனை யொன்று ஏளிகோயி லகம் என்ற பெயரால் இவ் வேழின் மலையின் வடபுறத்தடியில் உள் ளது. இதனடியில் இதன்கண் ஒழுகும் அருவிகள் கூடிச் செல்லும் சிற்றாறு நலம் சிறந்து சென்று கடலொடு கலக்கின்றது. அக் கலப் பால் உப்புக் கரிக்கும் கரிய நீரில் முதலையின் பேரினங்கள் வாழ்கின் றன. அவற்றால் அங்கு வாழும் மக்களுக்கும் விலங்குகட்கும் உயிர்க் கேடு உண்டாவது இயல்பு.

தென்கன்னடம் சில்லாவுக்கும் மைசூர் நாட்டுக்கும் எல்லையாக நிற்கும் மலைத்தொடரில் உள்ள முடிகளுள் ஒன்று குதிரைமலை யென் பது. இதன் உயரம் 6215 அடி. இதனை இப்போது சஞ்ச பருவ தம் (சம்ச பருவதம்) என வடமொழியாளர் வழங்குவாராயினும் பண்டைத் தமிழகத்துக் குரியதென உரிமை காட்டும் தமிழ்ப் பெய ரைக் கைவிடாது அங்கு வாழும் பொதுமக்கள் குதிரைமூக்கு மலை (Gudramukh) என்றே வழங்குகின்றனர். இதன்மேற் பொழியும் மழைநீர் ஒருபால் கிருஷ்ணையாற்றையும் ஒருபால் காவிரியாற்றையும் அடைகிறது. கடலிலிருந்து காண்போர்க்கு இது குதிரைமுகம் போலக் காட்சியளித்தலால் இப்பெயர் வரலாயிற்று.[1]

மேலைச் சோராது தென்மலைத் தொடர் 200 கல் நீளமுள்ளது. இது இழ்கொங்கு நாட்டிற்கும் பாண்டி நாட்டிற்கும் மேலெல்லையாய் நிற்கிறது. இதன்கட் காணப்படும் முடிகளுள் திருவிதாங்கூர் நாட்டுக் கோட்டயம் பகுதியில் நேரிமலையும் அயிரைமலையும் பேரியாற்றின் கரையில் நிற்கின்றன. கொச்சிநாட்டை யடுத்து வடகீழ்ப்பகுதியில் நிற்கும் நெல்லியாம்பதி மலைகளுள் பாதகிரி என்பது ஒன்று. இதனை மிதியாமலா என்றும் மியான்முடி யென்றும் கூறுவர். இது பற்றியே சேரர்களைச் சேரபாதர் என்று வடமொழி ரிக்வேதம் குறிக்கிறது[2]. இதன் உயரம் 5200 அடி. அதன் அடியிலுள்ள

[1] Imp. Gazet. Mysore & Coorg. P. 233 and 109.
[2] Rig Veda. Vol. vii. 1. 1. 14.

நாட்டவர், குறுமுனிவர் பொதியமலைக்கு வந்தபோது அவருடைய செருப்படி யழுந்தியதனால் அம்முடி செருப்புப்போலாயிற்றென்றும், அது சித்தர் வாழிடமாதலால் யாரும் அதன்மேல் கால்வைத்து ஏறக்கூடாதென்பது பற்றி மிதியாமலையென அதற்குப் பெயரெய்திற்றென்றும் உரைக்கின்றனர். செருப்பென்பதன் பொதுமை நீக்கி மலையைச் சிறப்பாக உணர்த்தல் வேண்டிய சங்கச் சான்றோர், மிதியல் செருப்பு என்றும் அது பூழி நாட்டுக்குரிய தென்பது தோன்ற "மிதியல் செருப்பின் பூழியர்[1]" என்றும் இசைத்துள்ளனர். உண்மை வரலாறு இது.

இச்சேரநாட்டு மேற்குமலைத் தொடரில் தோன்றி இழிந்தோடும் ஆறுகள் பல. அவற்றுள் தமிழ்ச்சான்றோர் பரவும் புகழமைந்த பேராறுகளுள் காவிரியும் வையையும் தண்ணான் பொருநையும் பேரியாறும் சிறப்புடையனவாம். இவற்றுட் காவிரியாறு சேரரது குடநாட்டில் தோன்றித் தன்னைப் போல் தோன்றிவரும் ஏனைச் சிற்றாறுகளோடு கூடிக் கொங்குநாடு கடந்து சோழநாட்டிற் பரந்து பாய்ந்து கடலில் கலக்கும் சிறப்புடையது. இதனால் சோழநாடே பெரும்பயன் எய்துவது பற்றி, இது சோழர்க்குரியதாய் நிலவுகிறது. சோழ நாட்டுச் சோழவேந்தரைப் பாடும் சான்றோர் காவிரிக்குச் சொன்மாலை சூட்டிச் சிறப்பிக்கின்றனர். பாண்டியரது பாண்டிநாட்டு வையையாறும் சேரருடைய தென்மலைத் தொடரில் தோன்றிப் பாண்டிநாட்டிற் படர்ந்து பயன்பட்டுக் கடலில் கலந்து விடுகிறது. பாண்டிவேந்தரைப் பரவும் பாவலர் பலரும் இவ் வையையாற்றை வான்புகழ் வயங்கப் பாடியுள்ளனர். தண்ணான் பொருநை பொதியிலுக் கண்மையில் தோன்றித் தென்பாண்டிநாட்டிற் பாய்ந்து தென் கடலிற் சென்று சேர்கிறது.

செந்தமிழ் நாட்டில் சிறப்புடைய ஆறுகட்குத் தோற்றுவாயாய் விளங்குவது சேரநாடாயினும் அந் நாட்டிலே தோன்றி அந் நாட்டிலே படர்ந்தோடி அந்நாட்டு மேலைக்கடலிற் கலக்கும் பெருமையாற் பிறங்குவது பேரியாறாகும். இதுபற்றியே சிலப்பதிகாரம் பாடிய சேரரிளங்கோ சோழநாட்டுப் புகார்க் காண்டத்தில் காவிரியாற்றையும் பாண்டிநாட்டு மதுரைக் காண்டத்தில் வையை யாற்றையும்

---

[1] பதிற். 21:23.

பாடிச் சேரர்க்குரிய வஞ்சிக்காண்டத்தில் பேரியாற்றைப் பெரிதும் புகழ்ந்து பாடியிருக்கிறார்.

ஏனைக் காவிரியையும் வையையும் போலப் பேரியாற்றைப் பற்றித் தமிழ்மாணவர் நன்கறியும் வாய்ப்பு இலராதலால் அவர் பொருட்டு அதன் தோற்ற வொடுக்கத்தைக் கூறுவோம். மேலைமலைத்தொடரின் தென்மலைப் பகுதியில் சிவகிரிக் காட்டின் இடையே ஏரி ஒன்றுளது. அதன்கண் வழிந்தோடுவது பேரியாறு. இங்ஙனம் தோன்றும் பேரியாறு வடக்கு நோக்கி 10கல் அளவு சென்று முல்லையாற்றொடு கூடிக் கொண்டு மேற்சென்று இரண்டு பெருமுடிகட்கிடையே அவற்றின் அடியைக் குடைந்து செல்கிறது. அவ்விடத்தே சென்னையரசியலார் 1200 அடி நீளமும் 160 அடி உயரமுள்ள அணையொன்று கட்டித் தேக்கி அதன் பெருக்கின் பெரும்பகுதியை வையை யாற்றில் கலக்கும் சிற்றாறொன்றில் திருப்பிவிட்டனர். அவ்வணையின்கீழ் செல்லும் பேரியாறு மலைப்பிளவுகளின் வழியாய் மேலைக்கடற்கரைப் பக்கம் இறங்கத் தலைப்பட்டுச் சிறிதுசென்றதும் அங்கே வந்து சேரும் பெருந்துறையாற்றொடு கூடுகிறது; பின்பு அவ்விடத்தினின்றும் இறங்கி வருகையில் சிறுதானி யெனப்படும் சிற்றாறு வந்து சேருகிறது. சிறிது தூரம் சென்றதும், முதற்கண் குடவாறு வந்து கூடப்பெற்றுச் சிறிது சென்றதும், கொடைவள்ளலான குமணனுக்குரிய முதிரமலையில்தோன்றிவரும் முதிரப்புழா என்னும் ஆற்றை வரவேற்றுத் தழீஇக்கொண்டு வடமேற்கு மூலையாகச்சென்று கோகரணிப்பாறை யென்னுமிடத்தே நூறடியாழத்திற் குதித்து எட்டுக் கல்தொலையில் வீழ்ந்து கிடக்கும் பெரும்பாறையின் அடியிலுள்ள முழைஞ்சினுட் புகுந்து மறைந்து நெடிதுசென்று தலைகாட்டுகிறது. நீர் மிகப்பெருகி வருங்காலத்தில் அப்பாறை மேல் வழிந்தோடுவது பேரியாற்றுக்கு இயல்பு. இவ்வண்ணம் வெளிப்பட்டுவரும் பேரியாறு வரவர வாயகன்று ஆழம் சிறந்து காட்டுமரங்களைச் சுமந்து செல்லும் பெருக்குடையதாகி நேரிமங்கலத்தருகில் தேவியாற்றோடும், அதற்

குப்பின் எட்டுக்கல்தொலையில் இடியாறெனப்படும் இடைமலையாற்றோடும் கூடி 1200 அடி அகலமுடையதாய் இயங்குகிறது. அவ்வளவில் பலசிற்றாறுகள்வந்து சேர்கின்றன. அங்கிருந்து பலகுன்றுகட்கிடையே வளைந்தும் நெளிந்தும் செல்லும் இப் பேரியாறு ஆலப்புழையை நெருங்கியதும் இருகிளையாய்ப் பிரிகிறது. ஒருகிளை ஆலப்புழையின் வடமேற்கே சென்று அங்குள்ள காயலில் விழுகிறது; மற்றொன்று தெற்கில்வந்து பலகிளைகளாகப் பிரிந்து வீரப்புழைக் காயலிலும் திருப்பொருநைத்துறைக் காயலிலும் வீழ்ந்துவிடுகிறது. வீரப்புழை வீரப்பொலி யெனவும் திருப்பொருநைத்துறை திருப்புனித்துரு எனவும் இப்போது சிதைந்து வழங்குகின்றன. இதன்நீளம் 142 கல் என்று கணக்கிட்டுள்ளனர்[1].

கடலளவுக்கு 2800 அடி உயரத்தில் மலைமுகட்டில் தோன்றி 60 கல் அளவு மலையிடையே நெளிந்து வளைந்து தவழ்ந்து தாவித் தள்ளிப் பாய்ந்துவரும் பேரியாறு தன்மேல் அடர்ந்து படர்ந்து செறிந்து தழைத்துநிற்கும் பசுங்கானம் போர்த்துத் திருமால்போல் இனிய காட்சி நல்கும் மேற்குமலைக் குவட்டில் அத்திருமால் மார்பில் கிடந்து மிளிரும் முத்துமாலை போல இனிய காட்சி நல்குகிறது. அதன் இருகரையிலும் கோங்கமும் வேங்கையும் கொன்றையும் நாகமும் திலகமும் சந்தனமுமாகிய மரங்கள் வானளாவ ஓங்கி நிற்கின்றன. அவற்றின் பூக்களும் ட்சந்தழைகளும் ஆற்றில் உதிர்ந்து அதன் நீரைப் புறத்தே தோன்றாதபடி மறைத்து விடுகின்றன. இவ் வியல்பை இளங்கோவடிகள்

"கோங்கம் வேங்கை தூங்கிணர்க் கொன்றை
நாகம் திலகம் நறுங்கா ழாரம்
உதிர்பூம் பரப்பி னொழுகு புனலொளித்து
மதுகரம் ஞிமிறொடு வண்டினம் பாட
நெடியோன் மார்பி லாரம் போன்று
பெருமலை விலங்கிய பேரியாறு"[2]

என எடுத்தோதுகின்றார்.

---

[1] Nagam Iyer's Travancore Manual Vol. I. p. 17-8.

[2] சிலப். 25: 17-22

இச் சேரநாட்டு மலைத்தொடரிற் பாலைக்காட்டுக் கணவாயின் வடக்கிலுள்ள வடமலைத்தொடரினும், தெற்கில் ஆனைமலைமுதலாக வுள்ள தென்மலைத் தொடரிலும் ஆறுகள் பல உண்டாகின்றன. அவற்றுள் வடமலைத்தொடராகிய வானமலை 800கல் நீளமுடையது.

அதன்கண் தோன்றும் சிறப்புடைய ஆறுகளை வானியென்றும் தென்மலைத் தொடராகிய பொருப்பில் தோன்றும் சிறப்புடைய ஆறுகளைப் பொருநை யென்றும் பண்டைத் தமிழ்ச் சான்றோர் பெயரிட்டிருக்கின்றனர். தென்கன்னடம் சில்லாவுக்கும் வட கன்னடம் சில்லாவுக்கும் எல்லையாய்க் கிழக்கு மேற்காக ஓடிக் கடலில் கலக்கும் ஆறு வானியாறு எனப்படும்; இப்போது அது கன்னடரால் ஹோனவாறு என்றும் ஷிராவதி என்றும் சிதைக்கப் பெற்றுள்ளது; ஹோனவாறு இன்று ஷிராவதியாறு கடலொடு கலக்கும் இடத்து நகரத்துக்குப் பெயரளவாய் நின்றுவிட்டது. ஆறு மாத்திரம் சேரவாறெனநின்று பின்பு ஷிராவதியாகிவிட்டது. இவ் வடமலைத் தொடரில் தென்னிறுதியில் தோன்றும் ஆறு, பாலைக் காட்டுக் கணவாயில் பாரதப் புழையுடன் கலந்து ஓடி, மேலைக் கடலில் பொன்வானி நகர்க்கண்மையில் கடலொடு கலக்கின்றது. இப் பொன்வானி இப்போது பொன்னானியெனச் சிதைந்து வழங்குகின்றது. வடமலைத் தொடரில் தோன்றிக் கிழக்கில் மைசூர் நாட்டில் ஓடிக் காவிரியொடு கலக்கும் ஆறு கீழ்ப்பூவனி யென்றும் உதக மண்டலத்தில் தோன்றிக் கோயம்புத்தூர் சில்லாவில் ஓடிக் காவிரி யொடு கலக்கும் ஆறு பூவானி யென்றும் பண்டைச் சான்றோரால் வழங்கப்பெற்றன. இப்போது அவை கெப்பானி (Kebbani) என்றும் பவானியென்றும் முறையே மருவி நிலவுகின்றன. கோயம்புத்தூர் சில்லாவில் கோபிச்செட்டிபாளையம் தாலுகாவில் இப்பூவானியாற்றின் கரையில் பூவானி யென்று பெயர்தாங்கிய ஊரொன்றிருப்பதும் அப் பகுதியை இடைக்[illegible]லவெட்டுக்கள்[1] பூவானிநாடெனக் குறிப்பதும் இம்முடிபுக்குச் சான்று பகர்கின்றன.

[1] S I I Vol. VII. 19 and 30.

இவ்வடமலைத் தொடரில் தோன்றும் ஆறுகள் பலவும் வானி யென்று பெயர் பெறுவதை நோக்கின், இம்மலைத்தொடர் வானமலை யென்ற பெயர் கொண்டு ஒரு காலத்தே நிலவியிருந்த தென்பது நன்கு தெளிவாகிறது. இம் மலையின் வடபகுதியில் வானியாற்றின் கிழக்கில் உள்ள நாட்டுக்கு வானவாசி என்று பெயர் கூறப்படுகிறது. அங்குள்ள அசோகன் கல்வெட்டுக்கள்[1] அதனை வானிவாசி என்கின் றன. வாசி யென்பது பாசி யென்னும் தமிழ்ச் சொல்லின் சிதைவு. பாசி, கிழக்கு என்னும் பொருளது[2]; ஆகவே வானவாசி வானமலைக்குக் கிழக்கிலுள்ளது என்றும், வானியாறு வானமலையில் தோற்றமுடைய ஆறு என்றும் பொருள்படுமாறு காணலாம். இவ்வடமலையின் தென் பகுதி பாயல் நாடென வழங்குமாயினும் பொதுவாக மேற்கில் கொண்கானத்துக்கும் கிழக்கில் வானவாசிக்கும் இடை நிற்கும் மலை நாடு, வானநாடென வழங்கினமை தேற்றம்.

தென்மலைத் தொடரான பொருப்பு மலையில் தோன்றும் பேரி யாற்றின் கிளையைப் பொருநை யென்றும், அது கடலொடு கலக்கு மிடத்திலுள்ள ஊர்க்குத் திருப்பொருநைத்துறையென்றும், கிழக் கில் கோயம்புத்தூர் ஜில்லாவில் தாராபுரம் வழியாக ஓடிக் காவிரி யொடு கலக்கும் ஆற்றுக்கு ஆன்பொருநை யென்றும், திருநெல் வேலி வழியாக ஓடிக் கடலொடு கலக்கும் ஆற்றைத் தண்ணான் பொருநை யென்றும் பண்டையோர் பெயரிட்டுள்ளனர். அவற்றுள் திருப்பொருநைத்துறை திருப்புனித்துறுவானூற் போல, ஆன் பொருநை ஆம்பிராவதி அமராவதி யென்றும் தண்ணான் பொருநை தாம்பிரபரணி யென்றும் இப்போது மருவின வாயினும் இப்பெய ரனவே நோக்கின் பண்டைச் சேரநாட்டின் வடபகுதி வானவாசி நாடு வரையில் பரந்திருந்தமை இனிது தெளியப்படும்.

---

[1] L. Rice. Mysore Vol. I. p. 191. [2] புறம். 229.

# *மதிப்புரை

## சுந்தரகாண்டம் முதற்பகுதி (மாதிரிப்பதிப்பு)

[கம்பர் பாடிய இராமாயணத்தின் சுந்தரகாண்டத்தில் உள்ள படலங்களுள் முதல் ஐந்து படலங்களைத் தொகுத்து மாதிரிப் பதிப்பாக வெளிவந்திருக்கும் இந்த நூல் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் வெள்ளி விழா மலர்; இதனை அண்ணாமலைப் பல்கலைக் கழகம், துணை வேந்தராய் முன்னாள் இருந்த திரு. C. P. இராமசாமி ஐயர் அவர்களின் ஆங்கில முன்னுரையும் அவர்க்கு உதவியாய் இருந்த திரு. இராமநாதபிள்ளையவர்களின் தமிழ் முன்னுரையும் சேர்த்து வெளியிட்டுள்ளது. இந் நிலையில் இது விற்பனைக்குரிய தன்மையில் விலை குறிக்கப்படவில்லை போலும்.]

இடைக்காலச் சோழவேந்தர் காலத்தில் தமிழில் தோன்றிய பெருங் காப்பிய நூல்களில் கம்பரது இராமாயணம் தலைசிறந்தது. அஃது ஏழு காண்டங்களையுடையது: எனினும் முதல் ஆறுகாண்டங்களே கம்பர் பாடியவை என்ற கருத்துத் தமிழகத்தில் நன்கு வேரூன்றியுளது. ஏழாவதாகிய உத்தரகாண்டம் கம்பர் செய்தது அன்று என்றும்; ஒட்டக்கூத்தர் பாடியது என்றும் ஒரு கருத்து, கம்பரும் ஒட்டக்கூத்தரும் என்ற தலைப்பில் பிற்காலத்தார் புனைந்துவிட்ட ஆதாரமற்ற பொய்க்கதைகளை அடிப்படையாகக் கொண்டு நிலவுகிறது.

கம்பராமாயணம் மூலம் மட்டில் சென்ற எழுபது ஆண்டுகளில் பல அறிஞர்களால் பல வேறு சமயங்களில் அச்சிட்டு வெளிப்படுத்தப் பெற்றுள்ளது. இவற்றுள் பொதுவாக அச்சுத் தொழிலிலும் கையெழுத்து வகையிலும் எத்தனை வகையான பிழைகள் செய்யப்படுமோ அத்தனையும் ஒருங்கே காணத்தக்க வகையில் இவ்வெளியீடுகள் இருந்து வந்தன. இப்போது கடைத்தெருக்களில் கம்பராமாயண மூலமே கிடைப்பது அரிதாய்விட்டது.

* மதிப்புரைக்குப் புத்தகம் அனுப்புவோர் 2 பிரதிகள் அனுப்பவேண்டும்.

சென்ற சில பல ஆண்டுகளாகக் கம்பராமாயணத்தைப் படிப்பதிலும் ஆராய்வதிலும் தமிழ்மக்களிடையே பெருக்கம் எழுந்து நல்ல பயன் விளைத்து வருகிறது. அதன் பயனாக அண்ணாமலைப் பல்கலைக் கழகம் நாட்டில் கிடைக்கப் பெறும் ஓலைச்சுவடிகளையும் அச்சுப்படிகளையும் கொண்டு பாடவேறுபாடுகளை ஆராய்ந்து மிகச்சிறந்தமுறையில் வெளியிடுதற்கு முன்வந்துள்ளது. தமிழகத்தின் நடுநாயகமாய் விளங்கும் தில்லையில் அமைந்துள்ள அண்ணாமலைப் பல்கலைக் கழகம் தமிழ்ப் பல்கலைக் கழகமெனப் பாராட்டப்படும் தகுதியும் பணியும் உடையதாகையால், இந்தப் பெருங் காப்பியத்தை நன்கு ஆராய்ந்து அது வெளியிடுவது பெரிதும் பொருத்தமும் சிறப்புமாகும். அது பற்றித் தமிழகம் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்துக்கு நன்றி செலுத்தப் பெரிதும் கடமைப்பட்டுள்ளது. இதனைப் பல்கலைக்கழகம் வெளியிடுதற்குக்காரணமுதல்வராயிருந்தவர் அதன் துணைவேந்தராய் விளங்கிய திரு. ஆர். கே. சண்முகம் செட்டியார் அவர்களாவர். அவர்களுடைய இந்த அரும்பணியைத் தமிழகம் ஒருகாலும் மறவாது. இதற்கு ஆதரவளித்த தமிழ்ப் பெருமகனார் ராஜா. சர் முத்தையா செட்டியார் அவர்கட்கும் பெரு நன்கொடை வழங்கிச் சிறப்பித்த திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்துத் தலைவர் ஸ்ரீலஸ்ரீ அருணந்தி தம்பிரான் சுவாமிகள் அவர்கட்கும் இன்றைய தமிழ் மக்களின் நன்றி பெரிதும் உரியதாகும்.

5373

இப்போது அண்ணாமலைப் பல்கலைக் கழக வெள்ளி விழா மலராக வெளி வந்திருப்பது கம்ப ராமாயணத்துச் சுந்தரகாண்டத்தின் முதற்பகுதியின் மாதிரிப் பதிப்பு. இதனை வெளியிடு முகத்தால் தமிழகத்து அறிஞர்களை இதன்கண் கருத்தைச் செலுத்தி இவ் வெளியீடு சிறந்தமுறையில் அமைவதற்கேற்ற திருத்தங்களை வழங்குமாறு பதிப்பாசிரியர்கள் தெரிவிக்கின்றனர்.

இம் மாதிரிப் பதிப்பின் முன்னுரை, கம்பராமாயணத்துக்கு இராமாவதாரம் எனக் கம்பர் பெயரிட்ட திறமும், அவதார மென்பு

தன் பொருள் விளக்கமும் இராமாவதாரத்தின் அமைப்பும் இராமாவதார நூலாசிரியரான கம்பரது வரலாற்றுக் குறிப்பும் அவர் வாழ்ந்த காலமும் மிகவும் தெளிவாக எடுத்துரைக்கின்றது. இந் நூற்கண் பல காண்டங்கள் இருப்ப, சுந்தரகாண்டத்தை முதற்கண் வரைந்து கொண்டதற்குக் காரணம், "உலகநூன் முறையானும் அறிவநூன் முறையானும் பல்வேறு உறுதிப் பொருள்களை நவலுதலால் சுந்தரகாண்டம் மற்றைக்காண்டங்களினும் சிறப்புடைத்து என்பது" என்றும், "சுந்தர காண்டம் பல்லோராலும் சிறப்பாகப் போற்றிப் பாராயணம் செய்யப்படுதல் உலகம் அறிந்த தொன்று" என்றும் இப் பதிப்பின் முன்னுரை எடுத்து மொழிகின்றது.

சுந்தரகாண்டத்தின் முதற்பகுதியாகிய இம் மாதிரிப் பதிப்பில் முதல் ஐந்து படலங்களே எடுத்துக் கொள்ளப்பட்டன.

சுந்தரகாண்டம் நுதலிய பொருளும் படலந்தோறும் படலம் நுதலிய பொருளும் முறையே தொடக்கத்தில் தந்திருப்பதும் பாட்டுக்களின் பொருளைப் படிப்பவர் இனிது உணர்ந்து கொள்ளுமாறு அருஞ்சொற் றொடர்கட்குப் பொருளும், வேண்டுமிடங்களில் வினை முடிபும், சிறிது விரிவாகத் தொடர்க்கருத்தும் எழுதியிருப்பதும் இப் பதிப்புக்கு மிக்க அழகு தருகின்றன. முடிவில் ஒவ்வொரு பாட்டிலும் காணப்பட்ட பாட வேறுபாடுகள் கண்ணும் கருத்துமாய் ஆராய்ந்து காட்டப்பட்டிருப்பது பதிப்பாசிரியர்களின் உழைப்பின் பெருமையை உலகறியச் செய்கின்றது.

இந் நூற்பதிப்பை அச்சிடும் வகையில் மாசுமறு வின்றிக் கண் கவரும் வகையில் அச்சிட்டுத் தந்தவர்களின் திறம் கண்டு வியந்து பணிகொண்ட பல்கலைக் கழகத்தின் செயல்வன்மை பெரிதும் பாராட்டற்குரிய தொன்று. இத்தகைய அச்சு வேலைப்பாடு இது காறும் வெளிவந்துள்ள அண்ணாமலைப் பல்கலைக் கழக வெளியீடுகளுள் எதற்கும் வாய்த்ததில்லை.

இம் மாதிரிப்பதிப்பு இம்முறையிலே நடைபெறுவதுதான் யாவரும் விரும்புவது. எனினும், ஒவ்வொரு பாட்டையும் சந்தி பிரிக்காமல் சீர் முதலிய யாப்பமைதி குன்றாத வகையில் ஒரு முறையும், "சந்தி பிரித்துப் பொருள் இயைபிற் கேற்பச் சீர் வரையறை நோக்காது சொற்களைக் கூட்டியும், தொடர்மொழிக் குறியீடுகளை ஆங்காங்கு இட்டும்" ஒரு முறையுமாக இரண்டுமுறை அச்சிடுவது வேண்டத் தக்கதன்ற. யாதேனும் ஒன்றைக் கடைப்பிடிப்பது நல்லது: இரண்டனுள் யாப்பமைதி குன்றாமல் முதற்கண் பதித்த முறையே பல்கலைக் கழகப்பதிப்புக்கு மாண்பு தருவதாகும். சீர்களைச் சிதைத்து யாப்பமைதி கெடுத்து எழுத்தெழுத்தாகப் 'பிரித்து அச்சிடுவது கம்பருடைய பாட்டிசையைக் கேட்க விரும்பாதார் செய்யவிரும்பும் செய்யுட் கொலையாம் என்பதை வருத்தத்தோடு தெரிவிப்பதுடன், இக் கொலை வினையைப் பல்கலைக் கழகம் செய்தல் அறமன்றென்பதையும் வற்புறுத்த விரும்புகிறோம்.

பல்லாயிரக்கணக்கில் உள்ள கம்பராமாயணப் பாட்டுக்கட்கு உரைக்குறிப்பு எழுதிச் சேர்ப்பது இக்காலத்துக்கு வேண்டுவதொன்றே. இத்தகைய பெருங்காப்பியத்துக்குப் பள்ளிமாணவர் பாடங்கட்கு எழுதப்படும் உரைபோலப் பதவுரை பொழிப்புரை எழுதிச் சேர்ப்பதும் மிக விரிந்த குறிப்புரை எழுதிச் சேர்ப்பதும் இப்பதிப்புக்களை எல்லோரும் வாங்கிப்படிக்கும் அத்துணை எளிய நிலைக்குக்கொண்டுசெல்லா. "சீவகசிந்தாமணி என்ற பெருங்காப்பியத்துக்கு நச்சினார்க்கினியர் எழுதிக்காட்டியிருக்கும் உரை முறைதான் கம்பராமாயணம் கந்தபுராணம் பாரதம் முதலிய பெருங்காப்பியங்கட்கு எழுதத்தக்க உரை முறை" என்று காலஞ்சென்ற டாக்டர் திரு. உ. வே. சாமிநாதையர் முதல் அண்மையில் நம்மிடை இருந்து மறைந்த திரு. பண்டிதமணி மு. கதிரேசன்செட்டியார் உள்ளிட்ட அறிஞர் பலரும் கூறிச்சென்றனர். இனி வரும் பதிப்பில் நச்சினார்க்கினியர் காட்டிய உரைநெறி மேற்கொள்ளப்படுமாயின்,

யாவரும் எளிதில் வாங்கிப்படித்துப் பயன் பெறத்தக்க சிறப்பு இப் பதிப்புக்கட்கு உண்டாகும் என்பது உண்மை.

இனி, கம்பருடைய வரலாறு கூறுமிடத்து இவரைப் பற்றி நாட்டில் வழங்கும் பல்வேறு குறிப்புக்களையும் தொகுத்துக் காட்டிப் பொய்யும் புனைந்துரையு மாவனவற்றைக் களைந்து எறிதலும் கம்பருடைய காலத்தை பற்றிய பலவேறு குறிப்புக்களையும் எடுத்தோதி முடிவு காட்டுதலும் இப் பதிப்புக்களின் முன்னுரையில் இடம் பெறுவது சிறப்பு.

இறுதியில் காட்டப் பெற்றிருக்கும் பாடவேறுபாடுகள் அனைத்தையும் அவ்வப் பாட்டின் அடிக்குறிப்பில் காட்டுவதுதான் படிப்போர் உண்மை யுணர்தற்கு அமைந்த முறை: அப்பொழுதும் பொருள் வேறுபாடும் சொல் வேறுபாடும் பொருந்திய பாடங்களை மாத்திரம் மேற்கொண்டு ஏடு படித்தோராலும் ஏடு எழுதினோராலும் பெயர்த்துக் காகிதத்தில் எழுதினோராலும் ஆக்கப்பட்ட பிழைப் பாடங்களை ஆங்காங்கே கையுதிர்த் தொழிதலே செய்யத்தக்கதாகும். இதற்கு டாக்டர் உ. வே. சா. ஐயர் வெளியிட்டுள்ள பாலகாண்டம் நேரிய வழிகாட்டியாகும்.

ஔவை, சு. துரைசாமிப்பிள்ளை.

# தனித்தமிழ்ப்பரீக்ஷைத்தேர்ச்சிக்குறிப்பு.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தார் ஜய-ஞு பங்குனி-மீ 23, 24, 25, 26உ (1955-ம்ஞு ஏப்ரல்-மீ 5, 6, 7, 8) ஆம் தேதிகளில் நடத்திய தனித்தமிழ்ப்பரீக்ஷைகளில் தேறிய மாணுக்கர்களின் அபிதானபத்திரம்.

## பண்டிதபரீக்ஷை.

| தரம் எண். | பதிவு எண். | 2-வது வகுப்பு. |
|---|---|---|
| 1 | 3 | A. பெருமாள், வெள்ளாண்டிவலசை இடைப்பாடி, சேலம் ஜில்லா. |
| 2 | 10 | S. சாம்பசிவன், 209, நாயக்கர் புதுத்தெரு, மதுரை. |
| 3 | 12 | அ. கி. செல்வகணபதி, ஆசிரியர் வடக்கு மாசிவீதி நகரவைப் பள்ளி, மதுரை. |
| 4 | 1 | C. ரெங்கநாதன், ஆசிரியர், வரிச்சிக்குடி (via) காரைக்கால், தஞ்சாவூர் ஜில்லா. |
| | 18 | ச. கனகசபாபதி, ஆசிரியர், ஆறுமுகவித்யாசாலை, சுழிபுரம் இலங்கை. |
| 5 | 17 | செ. சிவப்பிரகாசம், ஆசிரியர், பிரம்படி கொக்குவில் P.O. யாழ்ப்பாணம். |
| 7 | 5 | A. சிவசுப்பிரமணியபிள்ளை, ஆசிரியர், முத்தாலம்மன்கோவில் தெரு, வடிவீசுவரம்-நாகர்கோவில். |
| 8 | 22 | P. முருகேசு, ஆசிரியர், பெரியபோரதீவு E. P. சிலோன். |
| 9 | 14 | நா. சீனிவாசன், தமிழ்ச்சங்கக்கலாசாலை, மதுரை. |

---

## பிரவேசபரீக்ஷை.

| | | |
|---|---|---|
| . | 33 | S. தாஸையா, தமிழாசிரியர், St. Aloysius உயர்நிலைப்பள்ளி, Quilon Travancore State. (2-வது வகுப்பு.) |

மதுரைத்தமிழ்ச்சங்கம்,
மதுரை 14—7—'55.

*R. Shanmuga Rajeswaran,*
அக்கிராசனுதிபதி.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தார் 1955-ஆம்௵ மார்ச்சுமீ 5௳ நடத்திய

# ஆங்கிலகலாசாலைத் தமிழ்ப்பரீக்ஷைத் தேர்ச்சிக்குறிப்பு.

—————(o)—————

[எண்கள் ரிஜிஸ்டர் நம்பரைக் குறிப்பன.]

## I. பி. ஏ. பரீக்ஷை.

### 1-வது வகுப்பு.

| தொடர் எண். | ரிஜிஸ்டர் நம்பர். | |
|---|---|---|
| 1 | 806 | A. இராமசாமி, Thiagarajar College, Mathurai. (முதற்பரிசு ரூபா 50) |
| 2 | 807 | P. பழனியப்பன், Thiagarajar College Mathurai. (இரண்டாவது பரிசு ரூபா 45). |

### 2-வது வகுப்பு.

Madura College, Mathurai—1

Thiagarajar College, Mathurai—2.

## II. இண்டர்மீடியேட் பரீக்ஷை.

### 1-வது வகுப்பு.

| | | |
|---|---|---|
| 1 | 5 | N. ஜயலக்ஷ்மி, Fatima College, Mathurai. (முதற்பரிசு ரூபா 40) |

### 2-வது வகுப்பு.

Madura College, Madura—3.

Fatima College, Mathurai—6, 9, 10, 11.

Sir. Thiagarayar College, Vannarpet, Madras—13

## III. ஸ்கூல்பைனல் பரீக்ஷை.

1-வது வகுப்பு.

1 77 K. ராதா, St. Joseph's Girls' High School Mathurai. (முதற்பரிசு ரூபா 30)

2 72 A. L. பெரியணன் சண்முகம், St. Mary's High School, Mathurai. (இரண்டாவது பரிசு ரூபா 25)

3 149 S. K. கிருஷ்ணமூர்த்தி, Bishop Heber High School, Teppakulam, Trichinopoly, (மூன்றாவது பரிசு ரூபா 20)

4 307 K, சிவராமன், Hindu High School Triplicane, Madras. (நான்காவது பரிசு ரூபா 15)

5 306 J. கணபதி, Hindu High School, Triplicane, Madras. (ஐந்தாவது பரிசு ரூபா 12)

---

Setupathi High School, Madurai:—

1st Class—15, 25, 27, 31, 50, 51, 57, 58, 59, 70.

2nd Class—14, 17 to 19, 21 to 24, 28 to 30, 32 to 35, 39, 42 to 45, 47, 48, 52, 53, 55, 56, 60, 61, 63 to 69, 71.

St. Mary's High School, Mathurai:—

1st Class—74,

2nd Class—73, 75.

St. Joseph's Girls' High School, Mathurai:—

1st Class—76.

Madura College High School, Mathurai:—

1st Class—86, 89, 94.

2nd Class—78, 79, 81, 85, 87.

E. R. High School, Teppakulam, Trichinopoly:—

1st Class—96, 97. 103, 105, 107, 116, 119 to 121, 132, 135, 136, 144, 145.

2nd Class—95, 99 to 102, 104, 106, 108 to 115, 117, 118, 124 to 131, 133, 134, 138 to 143.

Bishop Heber High School, Teppakulam, Trichinopoly:—

1st Class—146, 148, 153, 157, 159.

2nd Class—150, 154 to 156, 158, 160, 161.

Rajendra Tutorial College High School, Teppakulam, Trichinopoly.—

1st Class—170, 171.

2nd Class—162 to 167, 169.

Sesha Aiyengar Memorial High School, Woraiyur, Trichi Dt :—

2nd Class—172.

Ranee's Govt. Girls' High School, Pudukottai:—

2nd Class—174 to 176, 178, 180 to 187, 189, 190, 193, 194, 197, 200, 201, 206, 208, 210.

Municipal High School, Saidapet, Vellore:—

1st Class—250.

2nd Class—214, 217 to 221, 225, 226, 228, 230, 231, 235, 237 to 244, 246 to 249, 251 to 253.

Kellet High School, Triplicane, Madras:—

1st Class—255, 275.

2nd Class—254, 256, 257, 260, 261, 265 to 273, 274

St. Ebba's Girls High School, Mylapore, Madras:—

2nd Class—277, 279 to 300,

Hindu High School, Triplicane, Madras:—

1st Class—309, 315, 317, 321, 323, 338.

2nd Class—301 to 305, 308, 310, 312, 314, 316, 318 to 320, 322, 324, 325, 327, 328 to 332, 334, 337.

Sri. R. K. M. Sarada Vidyalaya Girls' School, Thyagarayanagar, Madras:—

1st Class—339, 346, 350. 356, 358.

2nd Class—340 to 345, 347 to 349, 352, 354, 355, 357.

**Sri Ramakrishna Mission High School (North Branch) T. Nagar, Madras:—**

1st Class—362, 366.

2nd Class—360, 364, 365.

**Pachiappa's High School, Kancheepuram:—**

1st Class—368, 378.

2nd Class—369, 370, 373 to 375, 377, 379, 380, 382 to 384.

**Municipal High School, Tiruvannamalai:—**

1st Class—390.

2nd Class – 387 to 389, 391 to 393, 396 to 398.

**Municipal Girls High School, Tiruvannamalai:—**

1st Class—399.

**S. R. Board High School, Nanguneri:—**

1st Class—404.

2nd Class—400 to 403.

**St. John's High Schcol, Palayamkottai:—**

1st Class—435, 442.

2nd Class—407, 412. 416, 417, 419, 434, 436, 438, 439, 443, 444, 446, 448, 449

**Board High School, Polur:—**

2nd Class—450 to 452, 455 to 460, 462 to 464, 466, 467, 469, 470.

**Dalmia High School, Dalmiapuram:—**

2nd Class—472, 473, 475, 477 to 479.

**Board High School, Ariyalur, (Trichi Dt.):—**

1st Class—480, 485.

2nd Class—481, 482, 484, 487.

**P. K. N. High School, Tirumangalam:—**

1st Class—491, 493, 522, 541, 542, 546, 547, 569,

2nd Class—489, 490, 492, 494, 496 to 501, 504, 505 to 507, 510 to 516, 518, 520, 523, 525 to 535, 537, 540, 543, 544, 549, 551, 553, 556, 558 to 568, 570.

**Board Girls' High School, Tirumangalam:—**

2nd Class—572, 573, 575 to 577 579 to 582.

**S. V. High School, Kaniyur, (Coimbatore Dt.):—**

2nd Class—583 to 585, 587 to 591, 594, 596, 600, 601, 603 to 609.

**Hindu High School, Veeravanallur:—**

1st Class—625.

2nd Class—610 to 613, 615, 616, 618 to 622, 626, 628 to 630, 632 to 634.

**Board High School, Mettupalayam, (Trichi Dt.)**

2nd Class—636, 637, 639, 641, 643, 644, 646, 649, 650, 654 to 656, 658.

**Kumaragurupara Swamigal High School, Aduthurai:—**

1st Class—672, 673,

2nd Class—659 to 661, 663 to 669, 674, 677 to 680, 683.

**Sourashtra Girls' High School, Mathurai:—**

1st Class—684, 696,

2nd Class—685 to 695, 697 to 700, 703, 705.

**Rajah's High School Ramnad:—**

2nd Class - 706 to 710, 712 to 714, 716, 717, 719, 723, 725 to 730, 733, 735, 737 to 739, 741 to 745, 747 to 750, 752, 753, 755, 757 to 762, 764 to 768, 773, 776, 778, 779, 782, 783, 785, 787 to 789, 793, 797.

மதுரைத்தமிழ்ச்சங்கம்,<br>
மதுரை 14-7-1955.

*R. Shanmuga Rajeswaran,*<br>
அக்கிராசனாதிபதி.

# மதுரைத்தமிழ்ச்சங்கத்தில் விற்கப்படும் புத்தகங்கள்.

## I. சங்கப்பிரசுரம்.

| | | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|
| 4. | வைத்தியசாரசங்கிரகம் ... ... ... | 5 | 0 | 0 |
| 5. | பன்னூற்றிரட்டு ... ... ... | 3 | 0 | 0 |
| 8. | தமிழ்ச்சொல்லகராதி மூன்றாம்பாகம் ... ... | 5 | 0 | 0 |
| 10. | தொல்காப்பியம் செய்யுளியல் (நச். உரை) ... ... | 1 | 12 | 0 |
| 11. | திருவருணைக்கலம்பகம் ... ... ... | 0 | 6 | 0 |
| 13. | கலைசைச்சிலேடைவெண்பா ... ... ... | 0 | 6 | 0 |
| 15. | திருவாரூர் நான்மணிமாலை ... ... ... | 0 | 4 | 0 |
| 16. | ஸ்ரீகிருஷ்ணசரித்திரவிமர்சம் ... ... | 1 | 4 | 0 |
| 17. | பன்னூற்றிரட்டு (செலக்ஷன்) ... ... | 0 | 4 | 0 |

## II. செந்தமிழ்ப்பிரசுரம்.

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | ஐந்திணையைம்பது (உரையுடன்) ... ... | 0 | 4 | 0 |
| 2. | கனுநூல் (5) இனியதுநாற்பது (உரை) ... ... | 0 | 3 | 0 |
| 4. | புலவராற்றுப்படை ... ... ... | 0 | 3 | 0 |
| 7. | திருநூற்றந்தாதி (உரையுடன்) ... ... | 0 | 6 | 0 |
| 8. | திணைமாலைநூற்றைம்பது (உரையுடன்) ... ... | 0 | 8 | 0 |
| 9. | அநுமானவிளக்கம் ... .. ... | 0 | 10 | 0 |
| 10. | அட்டாங்கயோகக்குறள் ... ... ... | 0 | 2 | 0 |
| 12. | பன்னிருபாட்டியல் ... ... ... | 0 | 12 | 0 |
| 13. | நான்மணிக்கடிகை (பழைய உரை) ... ... | 0 | 4 | 0 |
| 14. | முத்தொள்ளாயிரச்செய்யுட்கள் ... ... | 0 | 3 | 0 |
| 16. | திருவாரூருலா ... ... ... ... | 0 | 8 | 0 |
| 17. | சுகசந்தர்சனதீபிகை ... ... ... | 0 | 12 | 0 |
| 18. | இயற்கைப்பொருட்பாடம் ... ... ... | 0 | 4 | 0 |
| 19. | தேவையுலா ... ... ... ... | 0 | 3 | 0 |
| 21. | சிதம்பரப்பாட்டியல் (உரையுடன்) ... ... | 0 | 8 | 0 |
| 22. | திருக்கலம்பகமூலமும் உரையும் ... ... | 1 | 0 | 0 |
| 23. | விக்கிரமசோழனுலா ... ... ... | 0 | 8 | 0 |
| 24. | குருமொழிவினாவிடை ... ... ... | 0 | 1 | 0 |
| 25. | கேசவப்பெருமான் இரட்டைமணிமாலை ... ... | 0 | 2 | 0 |
| 26. | திருத்தணிகைத்திருவிருத்தம் ... ... | 0 | 1 | 0 |
| 27. | மதுரைத்திருப்பணிமாலை ... ... ... | 0 | 8 | 0 |
| 30. | ஞானாமிர்தக்கட்டளை ... ... ... | 0 | 3 | 0 |
| 32. | மனீஷாபஞ்சகம் ... ... ... | 0 | 8 | 0 |
| 36. | உவமானசங்கிரகம் ... ... ... | 0 | 1 | 0 |
| 37. | மாறனலங்காரம் மூலமும் உரையும் ... ... | 4 | 8 | 0 |
| 48. | திருப்புல்லாணிமாலை ... ... ... | 0 | 2 | 0 |

| | | | | |
|---|---|---|---|---|
| 40. | திருமாலிருஞ்சோலைமலை அழகர்பிள்ளைத்தமிழ் ... | 0 | 8 | 0 |
| 41. | பொருட்டொகைநிகண்டு ... ... ... | 0 | 6 | 0 |
| 42. | அகராதிநிகண்டு ... ... ... | 0 | 12 | 0 |
| 43. | மேகவிடுதூது ... ... ... | 0 | 2 | 0 |
| 44. | திருக்குற்றாலமாலை ... ... ... | 0 | 2 | 0 |
| 45. | தண்டலையார்சதகம் ... ... ... | 0 | 4 | 0 |
| 46. | இராமோதந்தம் ... ... ... | 0 | 3 | 0 |
| 47. | பழமொழிமூலமும் பழைய உரையும் (2-வது 100) ... | 1 | 0 | 0 |
| 48. | சேதுநாடும் தமிழும் ... ... ... | 0 | 6 | 0 |
| 52. | கூடற்புராணம் ... ... ... | 0 | 10 | 0 |
| 53. | திருவள்ளுவர் (ஆங்கிலம்) ... ... ... | 0 | 6 | 0 |
| 54. | அரும்பொருள்விளக்கநிகண்டு... ... ... | 1 | 4 | 0 |
| 55. | மாறனகப்பொருளும் திருப்பதிக்கோவையும் ... | 0 | 12 | 0 |
| 56. | பாப்பாவினம் ... ... ... | 0 | 10 | 0 |
| 57. | மதுரைமும்மணிக்கோவை ... ... ... | 0 | 5 | 0 |
| 58. | பழனிப் பிள்ளைத்தமிழ் ... ... ... | 0 | 3 | 0 |
| 59. | கடம்பர்கோயில் உலா ... ... ... | 0 | 6 | 0 |
| 60. | சங்கரநயினார்கோயில் அந்தாதி ... ... | 0 | 6 | 0 |
| 61. | கலைசைக்கோவை ... ... ... | 0 | 12 | 0 |
| 62. | பெருந்தொகை ... ... ... | 5 | 0 | 0 |
| 63. | சூடிக்கொடுத்தநாய்ச்சியார்தோத்திரப்பாமாலை ... | 0 | 5 | 0 |
| 64. | சிராமலைக்கோவை ... ... ... | 0 | 12 | 0 |
| 65. | மத்யமவியாயோகம் ... ... ... | 0 | 2 | 0 |
| 67. | அமிர்தரஞ்ஜநி ... ... ... | 0 | 2 | 0 |
| 69. | பொன்வண்ணத்தந்தாதி மூலமும் உரையும் ... | 0 | 8 | 0 |
| 70. | திருச்சிறுபுலியூருலா ... ... ... | 0 | 12 | 0 |
| 71. | தனித்தலைவர் நினைவுமலர் ... ... ... | 0 | 10 | 0 |

1. சங்கத்தினின்று மாதம் ஒருமுறை அரிய பெரிய விஷயங்களைக் கொண்டுவெளியாகிவரும் இச் "செந்தமிழ்"ப்பத்திரிகைக்கு வருஷச்சந்தா ரூ 4. தனிப்பிரதியின் கிரயம் அணா 8. வெளிநாடுகளுக்கு வருஷச்சந்தா ரூ 4-8-0. இதுவரை 50 தொகுதிகள் பூர்த்தியாயிருக்கின்றன. இவற்றுள் 1, 2, 3, 6, 7, 8, 9, 10, 14, 16-ம் தொகுதிகள் கைவசமில்லை. 12 மாதப்பகுதிகள் உள்ள பைண்டு செய்யாத தொகுதி 1-க்கு ரூ 4—0—0 வீதம் விற்கப்பெறும். வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

2. சங்கப்பதிப்புப்புத்தகங்களை ஒரு ரூபாய்க்கும் அதற்கு மேற்பட்டும் வாங்குவோர்கட்கு ரூபா ஒன்றுக்கு அரையணா வீதம் கமிஷன் தள்ளிக்கொடுக்கப்படும்.

S. சிவஸ்வாமி, மானேஜர்.

Printed by Srimathu R. SHANMUGA RAJESWARA NAGANATHA SETHUPATHY AVL., and Published by T. N APPAN IYENGAR at the Tamil Sangam Power Press, No. 54, Tamil Sangam Road, Madura.